மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

லர் 2 | 1 - 11 - 53

★

புரட்சித் தலைவன் புத்துலகச் சிற்பி,

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற

வீரன்

லெனின்

★

உள் நாடு அணா 4 ★ மாதமிருமுறை ☆ வெளி நாடு

தூத்துக்குடிச் சதிவழக்கில்

தூத்துக்குடிச் சதிவழக்கில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த 96 பேர்கள்மீது ஆச்சாரியார் அரசாங்கம் சதிவழக்கு தொடர்ந்துள்ளது. சர்க்கார் தரப்பில் 91 சாட்சிகள் சேகரிக்கப்பட்டுள்ளனர். சதிவழக்கில் 16 சட்டப்பிரிவுகள் பிரயோகிக்கப்பட்டுள்ளன. அந்த சட்டப்பிரிவுகள் தரக்கூடிய பயங்கரத் தண்டனைகளின் விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள செக்ஷன்கள்	அவற்றிற்குத் தரக்கூடிய தண்டனைகள்
120 பி. செக்ஷன்	2 ஆண்டு தண்டனையிலிருந்து தூக்குத் தண்டனை வரை.
397 ,,	ஏழு ஆண்டு கடுங்காவலுக்குக் குறைவில்லாமல்.
395 ,,	ஆயுள் தண்டனை அல்லது 10 ஆண்டுகள் வரையுள்ள தண்டனை. அபராதமும் விதிக்கப்படலாம்.
147 ,,	2 ஆண்டுத் தண்டனை, அல்லது அபராதம், அல்லது இரண்டும் சேர்ந்து.
128 ,,	ஆயுள் தண்டனை அல்லது பத்து ஆண்டுகள் தண்டனை, அபராதத்துடன்.
143 ,,	ஆறுமாதத் தண்டனை, அல்லது அபராதம், அல்லது இரண்டும் சேர்ந்து.
149 ,,	ஆறுமாதத் தண்டனை, அல்லது அபராதம், அல்லது இரண்டும் சேர்ந்து.
435 ,,	ஏழு ஆண்டுகள் தண்டனை, அபராதமும் விதிக்கப்படலாம்.
126 ,,	ஏழு ஆண்டுகள் தண்டனை, அபராதமும் விதிக்கப்படலாம். மேற்கொண்டு சொத்துகள் பறிமுதல் செய்யப்படலாம்.
336 ,,	மூன்றுமாதம் வரை தண்டனை அல்லது 250 ரூபாய் வரை அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்து.
427 ,,	இரண்டு ஆண்டுகள், அல்லது அபராதம், அல்லது இரண்டும் சேர்ந்து.
148 ,,	மூன்று ஆண்டுகள், அல்லது அபராதம், அல்லது இரண்டும் சேர்ந்து.
307 ,,	ஆயுள் தண்டனை, அல்லது பத்து வருடம் அபராதத்துடன்.
448 ,,	ஒரு வருடம் தண்டனை, அல்லது ஆயிரம் ரூபாய் அபராதம், அல்லது இரண்டும் சேர்ந்து.
454 ,,	மூன்று ஆண்டுகள் தண்டனை, அபராதமும் விதிக்கப்படலாம். (இதே பிரிவில் குற்றம் கடுமையானதாக இருந்தால், சிறைத்தண்டனை பத்து ஆண்டுகள்வரை விதிக்கப்படலாம்.)
379 ,,	மூன்று ஆண்டுகள் தண்டனை, அல்லது அபராதம், அல்லது இரண்டும் சேர்ந்து.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

1-11-53 ஞாயிற்றுக்கிழமை

தூத்துக்குடி நாள்

தூத்துக்குடியிலும், கல்லக்குடியிலும் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்பெற்றன, "அஹிம்சா" மூர்த்தியான ஆச்சாரியாரின் "தர்மீக" ஆட்சியில். அமைதியுடனும், கட்டுப்பாடுடனும் கூடியிருந்த மக்கள் கூட்டத்தின்மீது, துப்பாக்கிக் குண்டுகள் பாய்ச்சப்பட்டன. தமிழ்நாடெங்கும் நடைபெற்ற கிளர்ச்சியில், மற்ற எல்லாவிடங்களிலும் அமைதியான முறையில் கூட்டத்தினர் நடத்தப்பட்டிருக்க, இந்த இரு இடங்களில் மட்டும், அதிகாரிகளின் ஆத்திரப்போக்கில், அவசர முயற்சியால் துப்பாக்கிப் பிரயோகங்கள் நடத்தப்பட்டன.

முன்பெல்லாம்—அன்னிய ஏகாதிபத்தியம் ஆண்ட காலத்தில்கூட, துப்பாக்கிப் பிரயோகங்கள் செய்வதற்குமுன், கூட்டத்தைப் பயமுறுத்துவதற்காக மேல் நோக்கிச் சுடவேண்டும்—அதாவது (Shoot to Scare)—பயமுறுத்தச் சுடு—என்ற உத்தரவு இருந்தது. ஆனால் காங்கிரசின் "அஹிம்சா" ஆட்சி அமைந்தபின் அந்த உத்தரவு மாற்றப்பட்டு, மேல் நோக்கிச் சுடாமல், முதலிலேயே கூட்டத்தினர்மீது சுடவேண்டும்—அதாவது கொல்வதற்காகச் சுடவேண்டும்—(Shoot to Kill)—என்ற உத்தரவு தரப்பட்டது. அவ்வாறு கொல்வதற்காகச் சுடப்பட்டதில், தூத்துக்குடியிலும், கல்லக்குடியிலும் ஆறுபேர்கள் உயிரிழந்தனர்—சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகங்களின் அநீதி கண்டு—ஆறுபேர் பலிகொள்ளப்பட்டு, பலருக்கும் படுகாயங்கள் உண்டாக்கப்பட்டது கண்டு, நாட்டுமக்களின் கண்டனம், இந்த அலங்கோலத்தை உண்டாக்கிய ஆச்சாரியார் ஆட்சிமுறைமீது பாய்ந்தது. சட்டசபையிலும் பல கண்டனக் குரல்கள் எழுந்தன. இதனால், நடத்தப்பட்ட துப்பாக்கி "விளையாட்டுக்கு" பாய்ச்சப்பட்ட குண்டுகளுக்கு, பலிகொள்ளப்பட்ட ஆறு உயிர்களுக்கு, சிந்தப்பட்ட இரத்தத்துக்கு, சிதைக்கப்பட்ட உடல்களுக்கு சமாதானம் கூறும்வகையில், துப்பாக்கிப் பிரயோகத்தின் அவசியத்திற்குக் காரணங்கள் கற்பிக்கும் வகையில், தூத்துக்குடியிலும், கல்லக்குடியிலும் கழகத்தின் முக்கிய தோழர்களின்மீது வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

தூத்துக்குடிச் சதிவழக்கில் மட்டும் 96 தோழர்கள் சிக்கியுள்ளனர். அவர்கள்மீது 16 செக்‌ஷன்கள் — சட்ட புத்தகத்தில் காணப்படும் மிகக் கடுமையான சட்டப் பிரிவுகள்படி குற்றஞ்சாட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு செக்‌ஷனும் எவ்வளவு பயங்கரத் தண்டனைகளைத் தரவல்லது என்பதை எதிர்ப்பக்கத்திலுள்ள பட்டியல் விளக்கிக்காட்டும். இரண்டாண்டு, ஐந்தாண்டு, பத்தாண்டு, ஆயுள் தண்டனை, தூக்குத்தண்டனை—ஐயகோ! அவ்வளவு சட்ட அம்புகள் தூத்துக்குடி சதிவழக்கில் நம் கழகத்தினர்மீது வீசப்பட்டிருக்கிறது.

தூத்துக்குடி தோழர்கள் 96 பேர் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கின்றனர். அவர்களை நோக்கி ஆச்சாரியார் அரசாங்கம் கோரச் சிரிப்பு சிரிக்கிறது.

அவர்கள் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கின்றனர். பயங்கர சட்டப்பிரிவுகள் அவர்களைப்பார்த்து பயமுறுத்துகின்றன.

அவர்கள் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டுள்ளனர். அவர்கள்மீது சுமத்தப்பட்டிருக்கும் குற்றச்சாட்டுகளை நிரூபிக்க, சர்க்கார் தரப்பில் 91 சாட்சிகள் தயாராக உள்ளனர்.

ஆச்சாரியார் அரசாங்கம் குற்றஞ்சாட்டுகிறது, 96 பேர்கள்மீது, 91 சாட்சிகளுடன், 16 பயங்கர செக்‌ஷன்கள்படி.

ஆனால் ஆச்சாரியாரின் ஆட்சியில், அடக்குமுறைக்கு ஆளான நாம், அந்த 96 பேர்கள்

சார்பாக சாட்சிகூற நாட்டு மக்களையே நாம் அழைக்கிறோம்.

நீதி விரும்புவோர், நேர்மையுளங்கொண்டோர், அரசியல் உலகிலே கண்ணியம் வேண்டுமென்போர், மக்களுரிமையில் நம்பிக்கை கொண்டோர் உங்கள் அனைவரையும் சாட்சியம் கூற அழைக்கிறோம்.

முதல் அமைச்சர் ஆச்சாரியார் பொதுக் கூட்டத்தில், திராவிடரியக்கத்தைத் தனது முதல் எதிரியெனக் கூறுகிறார். அவருடைய அரசாங்கம் சட்டமன்றத்தில் 96 எதிரிகளைக் கொண்டுவந்து நிறுத்தி இருக்கிறது.

சதிவழக்கு! 96 தோழர்கள்! தூக்குத் தண்டனை, தீவாந்தர சிட்சை, ஆயுள் தண்டனை, பத்து, ஐந்து ஆண்டுகள் சிறைவாசம் எனக் குறையின்றி தண்டனைகள் தரவல்ல 16 குற்றச்சாட்டுகள்! இவைகள் நிறைவேற வேண்டுமா?

தமிழ்நாட்டவரே! திராவிட இனத்தவரே! ஆன்றோர்களே! சான்றோர்களே! நாட்டின் பெரியோர்களே! எம்மைப் பெற்ற தாய்மார்களே! இளைஞர்களே! எதிர்காலத்தை வாழவைக்கும் நல்லிளஞ் செல்வர்களே! உங்களனைவரையும் கேட்கிறோம்.

உங்களின் பிரதிநிதியெனக் கூறிக்கொள்ளும் அரசாங்கம் சதிவழக்கைத் தொடுத்துள்ளது. சதிவழக்கை வாபஸ்பெறுக என அரசாங்கத்துக்கு—அதன் முதல் மந்திரி ஆச்சாரியாருக்கு அறிவியுங்கள். கழகத் தோழர்களைக் கொடுமைப்படுத்தும் சதிச்செயலை நிறுத்துங்கள்.

தலைமை நிலையப் பொறுப்பாளர் அறிக்கைப்படி, நவம்பர் முதல் வாரத்தில் நாடெங்கும் கூட்டங்கள் கூட்டி, மக்களின் வாக்குமூலங்களைச் சேகரித்து முதலமைச்சருக்கு அனுப்பி வையுங்கள்.

"சட்ட மன்றத்தில் வழக்கு இருக்கிறது, சட்டத்தின்படி அவர்கள் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளனர், இதில் நாமொன்றும் செய்வதற்கில்லை" என ஆச்சாரியாரோ, அவரைச் சார்ந்தோரோ கூறித் தப்பித்துக்கொள்ள முடியாது.

ஆச்சாரியார் விரும்பினால், நமது கழகத்தினர் மீதுள்ள வழக்குகளை வாபஸ்பெற முடியும். தியாகி பொட்டி சீராமுலு இறந்ததும் ஆந்திரநாட்டில் ரயில்கள் ஆங்காங்கு நிறுத்தப்பட்டன; வண்டிகள் பிரிக்கப்பட்டு, கிடங்குகள் சூறையாடப்பட்டு, தீ மூட்டப்பட்டு, பொருட் சேதங்கள் விளைவிக்கப்பட்டன. அரசாங்கத்தின் அலட்சியப் போக்குகண்டு கொதிப்படைந்த மக்களால் அவை நிகழ்ந்தன. அந்தச் சம்பவங்களில் நூற்றுக்கணக்கில் கைதுசெய்யப்பட்டுத் தண்டிக்கப்பட்டனர், கடுமையான சட்டப்பிரிவுகள்படி பலர்மீது வழக்குகள் தொடரப்பட்டன. ஆனால் பின்பு, ஆச்சாரியார் தண்டிக்கப்பட்ட ஆந்திரக் கிளர்ச்சியினரை விடுவித்ததுடன், சட்ட மன்றத்தில் முடிவு செய்யப்படாத 301 பேர்கள் மீது இருந்த வழக்குகளையெல்லாம் வாபஸ் பெற்றார்.

ஆந்திரக் கிளர்ச்சி மட்டுமல்ல, திருத்தணிக் கிளர்ச்சியில் ஈடுபட்டவர்கள் ஆச்சாரியார் அரசாங்கத்தால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கம்யூனிஸ்ட் கட்சியினர்மீது இருந்த பல சதி வழக்குகள் ஆச்சாரியாரால் வாபஸ் பெறப்பட்டுள்ளன.

எனவே தூத்துக்குடிச் சதிவழக்கையும் வாபஸ் பெறுவதில் ஆச்சாரியாருக்குத் தடையெதுவும் இருக்கமுடியாது. திராவிட முன்னேற்றக் கழகத்தை தனது அரசியல் அதிகாரத்தைக்கொண்டு ஒழித்துக்கட்டவேண்டும், கழகத்தைச் சார்ந்தவர்களைக் கடுமையாகப் பழிவாங்கவேண்டும், எதிர்ப்புக்குரலை அடக்க வேண்டும், என்று எதேச்சாதிகாரப் போக்கில் இருந்தால் மட்டுமே ஆச்சாரியாரால் கழகத்தின்மீதுள்ள வழக்குகளை வாபஸ்பெற முடியாது. அரசியல் நேர்மையில், ஜனநாயக உரிமைகளில் அரசாங்கத்துக்கும், முதல் அமைச்சருக்கும் நம்பிக்கை இருக்குமானால், கழகத்தின்மீதுள்ள வழக்குகளை வாபஸ் பெற வேண்டும்.

எனவே நவம்பர் முதல் வாரத்தில் நடத்தப்படும் "தூத்துக்குடி நாள்" கூட்டங்களில், சதி வழக்குகளை வாபஸ்செய்து, கழகத் தோழர்களை விடுவிக்குமாறு தீர்மானங்கள் நிறைவேற்றி, கூட்டத்தினரின் கையெழுத்துக்களுடன், அனுப்பிவையுங்கள். கழகத்தின்மீது தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளை நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை அறிவியுங்கள். மக்களின் குரலாவது இந்த மந்திரியின் காதில் விழுகிறதா என்று பார்க்கலாம்.

★ புரட்சி வீரன் லெனின் ★

முப்பத்தாறு ஆண்டுகளுக்குமுன் ருஷிய புரட்சி தோன்றியது. 1917 நவம்பர் 7-ந்தேதி, ருஷிய நாட்டுப் போல்ஷ்விக் கட்சியினரால் ஆட்சி முறை கைப்பற்றப்பட்டு, தொழிலாளர் அரசு அமைக்கப்பட்டது. உலகில் ஆறில் ஒரு பகுதியான ருஷியா—மேற்கே, மஞ்சள் கடலிலிருந்து கிழக்கே பால்டிக்கடல் வரை, வடக்கே பனி பரந்த ஆர்க்டிக் வெளியிலிருந்து தெற்கே பாமீர் பீடபூமி வரை பரந்து கிடந்த ருஷியா—ஜார் பரம்பரையினரின் கொடுங்கோல் ஆட்சியில் சிக்கி, ரஸ்புடின் போன்ற குருமார்களின் கோலாகல ஆட்சியில் கொடுமைப்பட்டு, ஏழ்மையும் அறியாமையும் பஞ்சமும் பிணியும் வாட்ட இருளில் மூழ்கிக் கிடந்த ருஷியா திடீரென மாறியது நவம்பர் 7-ந் தேதி. அந்த மாபெரும் மாறுதல்—புரட்சி தோன்றி முப்பத்தாறு ஆண்டுகளாகிவிட்டன.

இருபதாம் நூற்றாண்டில் நிகழ்ந்த வரலாற்றுச் சம்பவங்களில் ருஷியப் புரட்சி முதன்மையதாகும். அந்தப் புரட்சியால் உலகவரலாற்றில் புதியதொரு சக்தியும், போக்கும் உண்டாயின. அந்தச் சக்தி இன்னும் உலகைத் தன்பிடியிலே வைத்திருக்கிறது.

ருஷிய புரட்சித் தோன்றியது மட்டுமல்ல, அது வெற்றியடைந்ததுதான் வரலாற்றின் முக்கியச் சம்பவமாகும். அது வெற்றி பெறாதிருந்தால், அடக்கப்பட்ட கலகமாக, நசுக்கப்பட்ட ஒரு குழப்பமாக அது முடிந்திருக்கலாம். ஆனால் அந்தப் புரட்சிக்குத் தலைமைதாங்கி, வெற்றிகரமாக நடத்தித்தந்த பெருமை லெனினையேச் சார்ந்ததாகும். லெனின் காட்டிய திறமையால்தான், தீட்டிய திட்டங்களால்தான் ருஷியப் புரட்சி வெற்றிபெற்றது. அந்த வகையில் இருபதாம் நூற்றாண்டு வரலாற்றையே மாற்றியமைத்தவர் லெனின் ஆகும்.

வரலாற்றின் முக்கிய கட்டங்களில், தனிப்பட்ட மனிதர் ஒருவர் எடுக்கும் முடிபு வரலாற்றின் போக்கையே மாற்றியமைத்துவிடுவதுண்டு. அவ்வாறு ருஷிய நாட்டின் அமைப்பையும்—உலக வரலாற்றின் போக்கையும் மாற்றியமைத்த அரும்பெரும் ஆற்றல் வீரர் லெனின் ஆகும். அதனால் உலக வரலாற்றில் உன்னத இடத்தை லெனின் அடைகிறார்.

ருஷிய புரட்சியிலும், உலக வரலாற்றிலும் லெனினுக்குரிய இடம் வரலாற்றாசிரியர்களால்—அதிலும் வேடிக்கை யென்னவென்றால், ருஷியப் புரட்சியை விவரிக்க வந்த பொதுவுடைமை வரலாற்றாசிரியர்களால் இன்னும் தரப்படவில்லை. வரலாற்றுப் போக்கில், பொருளாதாரச் சூழ்நிலையில், நெருக்கடிகள் காரணமாக புரட்சி தோன்றி வெற்றி பெற்றதாகவும், அதில் புரட்சியின் அறிகுறியாக—பிரதிநிதியாக—அதில் உருவான மனிதராக லெனின் சித்தரிக்கப்படுகிறாரேயன்றி, லெனின் இல்லையென்றால் புரட்சியின் போக்கும், முடிவும் மாறிவிட்டிருக்கக்கூடும், பெரும்பாலும் வேறுவிதமாக இருந்திருக்கும் என்பது நன்கு உணர்த்தப்படவில்லை.

தனிப்பட்ட ஒருவரால் மட்டும் புரட்சியை உண்டாக்கிவிடமுடியாது. சமூகச் சூழ்நிலையில்தான் புரட்சிக்கான காரணங்கள் உண்டாகின்றன, ஆனால் புரட்சிக்கான சூழ்நிலையும், காரணங்களும் மட்டுமே புரட்சியை உண்டாக்கிவிடுவதில்லை. உலக வரலாற்றில், பல சமயங்களில் அத்தகைய சூழ்நிலையும், தேவையும் உண்டாயிருந்தபோதிலும் ஒவ்வொரு சமயத்திலும் புரட்சி உண்டானதாகக் கூறமுடியாது. மேலும் புரட்சி தோன்றிவிட்டபோதிலும், அது வெற்றியடையுமா, தோல்வியுறுமா என்பது புரட்சிக்குத் தலைமைதாங்குகிற ஒரு சில முக்கியமானவர்கள் கையில்தான் இருக்கிறது. மேற்கொண்டு நடத்துகிறவர்களின் திறமையால்தான் புரட்சி வெற்றியடைகிறது. புரட்சி ஆரம்பிக்கப்பட்டுவிட்டால் தானாக வெற்றியடைந்துவிடுவதில்லை.

உதாரணமாக, உலக வரலாற்றில் சிறப்பித்துச் சொல்லப்படும் இரண்டு புரட்சிகளில், முதலாவதாக வந்த பிரெஞ்சுப் புரட்சி எடுத்த குறிக்கோள்களை நிறைவேற்றமுடியாமல் நின்றது, ருஷிய புரட்சி வெற்றி பெற்றது. இதில் மிக முக்கியமான காரணம் ருஷிய புரட்சியின் போது இருந்த ஆற்றல் மிகுந்த தலைவரைப் போன்று பிரஞ்சுப் புரட்சியின்போது இல்லை.

1917-ல் ருஷிய நாட்டு அரசியலில் இரண்டு புரட்சிகள் தோன்றின. முதலில் 1917 மார்ச் மாதம் தோன்றிய புரட்சியில் ஜார் மன்னர் ஆட்சி கவிழ்ந்தது, குடியாட்சி தோன்றியது.

இதற்குக் கொரன்ஸ்கி என்பவர் தலைமைவகித்து நடத்திவந்தார்.

இரண்டாவது அக்டோபர் மாதம் தோன்றிய புரட்சிதான் போல்ஷ்விக் (ருஷியப் பொதுவுடமை) கட்சியினர் நடத்தியதாகும். இதில் கொரன்ஸ்கி அரசாங்கம் கவிழ்ந்து பொதுவுடமைக் கட்சி, லெனின் தலைமையில் அரசமைத்தது.

முதலில் மார்ச் புரட்சியின்போது, மன்னராட்சி ஒழிந்து கொரன்ஸ்கி அரசாங்கம் அமைந்தபொழுது, லெனின் ருஷியாவில் இல்லை. ஸ்விட்சர்லாந்தில் இருந்த லெனின், புரட்சி மூளுகிறது என்ற செய்தியறிந்து விரைந்து ருஷியாவிற்கு மாறுவேடத்தில் வந்தார். ருஷியாவிற்கு வந்ததும், வெளிப்பட உண்மைப் பெயருடன் உலவமுடியாமல், மறைந்தே வாழ்ந்தார். ஆனால் அப்பொழுது நாட்டு நிலைமையைக் கவனிக்கவும், தனது கட்சியினருக்கு திட்டங்கள் தரவும் அவரால் முடிந்தது. 1917 மார்ச் புரட்சிக்குப்பின் ருஷிய பொதுவுடமைக் கட்சியினர் கொரன்ஸ்கி அரசாங்கத்தைத்தான் ஆதரித்துவந்தனர். கொரன்ஸ்கியின் ஜனநாயக அரசாங்கத்துக்குப் பலமாக மக்கள் சக்தியைத் திரட்டித் தரவேண்டுமெனப் பாடுபட்டனர். அந்தவகையில் கட்சியின் நடவடிக்கைகள், பேச்சுகள், கோஷங்கள் எல்லாம் இருந்தன. கொரன்ஸ்கி அரசாங்கத்தை ஆதரித்தபடி-தான் ஸ்டாலின் உட்பட எல்லா பொதுவுடமைத் தலைவர்களும் இருந்தனர். லெனின் ருஷியா திரும்பியதும், நாட்டு நிலைமையைப் பரிசீலனை செய்து, கொரன்ஸ்கி அரசாங்கத்தைப் பொதுவுடைமைக் கட்சியினர் ஆதரிப்பது தவறு எனக் கண்டார். இந்தக் கருத்தை, 1917 ஏப்ரல் மத்தியில் கூடிய பொதுவுடமைக் கட்சியினரின் முக்கிய கூட்டத்தில் வெளியிட்டார். முதலில் லெனினின் கருத்தை யாரும் ஒப்புக்கொள்ளவில்லை. லெனின் மட்டும் தனியாக இருந்தார். ஆனாலும் தனது கருத்தை லெனின் வலியுறுத்தியபடி வந்தார், வந்த எதிர்ப்புகளைச் சமாளித்தார். ஒரு மாதத்திற்குள் கட்சியின் மற்ற தோழர்களில் பெரும்பாலோரை தனது பக்கம் சேர்த்துக்கொண்டார். அதன் பிறகு கொரன்ஸ்கி அரசாங்கத்தை ஆதரிப்பதை நிறுத்தி, எதிர்ப்பது என்று ருஷிய போல்ஷ்விக் கட்சி, லெனின் தூண்டுதலின்பேரில் தீர்மானித்தது.

இந்தத் தீர்மானத்திற்குப் பிறகு கொரன்ஸ்கி அரசாங்கத்தை எதிர்த்துக் கவிழ்ப்பதே போல்ஷ்விக் கட்சியின் முக்கிய வேலைத்திட்டமாகியது. ஆனால் ஒரு அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குத் தீர்மானம் செய்து, திட்டங்கள் தீட்டினால் மட்டும் போதாது; அரசாங்கத்தைக் கவிழ்ப்பது என்பது சுலபமான காரியமல்ல. கொஞ்சம் தவறினாலும், ஆபத்து உண்டாகும். மிகவும் சரியான சமயத்தில், நிச்சயமாக முடியும் என்ற நிலைமையில்தான் அதைச் செய்ய முற்படவேண்டும். இந்த நோக்கத்தில் லெனின் மிகவும் பொறுப்புடன் நிலைமையைக் கவனித்துவந்தார்.

ஆனால் கொரன்ஸ்கி அரசாங்கத்தை எதிர்த்துக் கவிழ்க்கவேண்டுமென்ற தீர்மானம் வந்ததும், கட்சியிலிருந்த சிலர் உடனே ஆயுதங்களைத் தாங்கிப் புரட்சி செய்யவேண்டுமெனத் தாவிக் குதித்தனர். 1917 ஜூன், ஜூலை மாதங்களில் அத்தகைய ஆவேச ஆத்திரக்காரர்கள் பீட்ரோகிராட், மாஸ்கோ தொழிலாளர்களிடை பிரசாரம் செய்யத் தலைப்பட்டனர். இது லெனினுக்கு இரண்டாவது வேதனையாக வந்தது. முதலில் கொரன்ஸ்கி அரசாங்கத்தை ஆதரிப்பதை மாற்றி, எதிர்க்கவேண்டுமென்பதற்குக் கட்சியைக் கொண்டுவர அவர் பாடுபடவேண்டியிருந்தது. ஆனால் இப்பொழுது கொரன்ஸ்கி அரசாங்கத்தை எதிர்ப்பது என்று ஆரம்பித்ததும் உடனே செய்துவிட வேண்டுமென்று துடிப்பவர்களை அடக்கவேண்டியிருந்தது லெனினுடைய பயமெல்லாம், அரசாங்கத்தை ஆயுதந்தாங்கி எதிர்ப்பது என்று ஆரம்பித்துவிட்டால் கடைசிவரை உறுதியுடன் நின்று வெற்றிகரமாக முடிக்கவேண்டும், இடையில் முடியாது போய்விட்டால், அரசாங்கத்தின் கடுமையான அடக்குமுறைக்கு ஆளாவதுடன், பல ஆண்டுகளுக்கு அரசாங்கத்தை எதிர்க்கும் சந்தர்ப்பம் ஒத்திப்போடப்படலாம் என்பதாகும். எனவேதான் லெனின் அதில் எச்சரிக்கையாக இருந்தார். ஆனால் அவரையும்மீறி, பல தொழிலாளர் இயக்கத்தினர் துப்பாக்கிகளை ஏந்திக்கொண்டு ருஷிய நாட்டுத் தலைநகரில் புரட்சிசெய்வோம் என உலவ ஆரம்பித்தனர். அவர்களை அடக்கி, பொறுத்திருக்கும்படி செய்வதற்குள் லெனின் பாடுபோதுமென்றாகிவிட்டது.

லெனினின் அறிவின் திறனும், செயலாற்றும் வன்மையும் முழுவதும் வெளிப்பட்டது, அக்டோபரில் நடந்த புரட்சிக்குத் திட்டமிட்டபொழுதுதான். லெனின் மறைவாக வாழ்ந்தபோதிலும், ருஷிய ராணுவத்தின் நிலைமையையும், அதன் நடமாட்டங்களையும் நன்கு கவனித்துவந்தார். அரசாங்கத்தின் பலவீனத்தையும், ராணுவ அமைப்பில் அதிருப்தி வளர்ந்துள்ளதையும் கவனித்த லெனின், புரட்சியை ஆரம்பிப்பதற்குத் தக்க சமயம் வந்துவிட்டதென முடிவுசெய்தார். ஆனால் மறுபடியும் தனது கட்சியினரைத் தன் கருத்துக்குக் கொண்டுவரப் பாடுபடவேண்டியிருந்தது. இரண்டுமூன்று மாதங்களுக்குமுன் "புரட்சி இப்பொழுது கூடாது, சமயமறிந்து துவக்கவேண்டும்" என்று லெனின் கூறிய காரணங்களை, இப்பொழுது அவருக்கே மற்றவர்கள் திருப்பிச்சொல்ல ஆரம்பித்தனர். புரட்சியை ஒத்திப்போடவேண்டுமென்றே எல்லோரும் வாதிட்டனர். புரட்சியை உடனே துவக்கவேண்டுமென்ற லெனினுக்குப் பக்கபலமில்லை. மூன்றாவது தடவையாக லெனின் தன் திட்டத்தை வைத்துக்கொண்டு போராடவேண்டியிருந்தது.

போல்ஷ்விக் கட்சியின் மத்தியக் கமிட்டிக் கூட்டத்தில் லெனின் தனது திட்டத்தை வைத்துப்பேசினார். பலயான விவாதம் நடந்தது. "இப்பொழுது ஆரம்பித்தால் புரட்சி உண்டு, இல்லையேல் இல்லை" என்று லெனின் முழங்கினார். மத்தியக் குழுவின் பெரும்பாலோர் ஒத்துக்கொள்வதாயில்லை. லெனினின் ஆத்திரமும் அளவுகடந்தது. பொன்னான நேரம், இதைவிட்டால் வேறு சமயம் கிடைக்காது என லெனின் துடிதுடித்தார். கடைசியாக கட்சியின் மத்தியக் குழு தன்னை ஒத்துக்கொள்ளாவிட்டால், கட்சியின் சாதாரண அங்கத்தினர்களிடம் தனது திட்டத்துக்கு ஆதரவு தேடப்போவதாகப் பயமுறுத்தினார். கட்சியின் முக்கியமானவர்களைத் தனியாகக் கண்டு தனது காரணங்களை விளக்கினார்; தனது தீர்மானத்துக்கு ஆதரவு திரட்ட, தலைமை அமைப்பிலிருந்தவர்கள் பலருக்குக் கடிதங்கள் தனிப்பட்ட முறையில் எழுதினார். கடைசியாக 1917 நவம்பர் 2-ந் தேதி கூடிய மத்திய கமிட்டிக்கு, "இன்னும் சில நாட்களுக்குள் ஆயுதந்தாங்கி, அரசாங்கத்தை எதிர்த்து, புரட்சி செய்யவேண்டியது" என எச்சரித்தார். லெனினுக்கு கட்சியிலிருந்த செல்வாக்கும், அவரது இடைவிடாத முயற்சியும் அவரது திட்டத்துக்கு ஆதரவு சேர்த்தன. கடைசியாக போல்ஷ்விக் கட்சி அவரது கருத்தை ஏற்றுக்கொண்டது.

தனது தீர்மானத்துக்கு ஆதரவுகிடைத்ததும், புரட்சி நடத்தப்படவேண்டிய முறைகளை லெனின் வகுத்தார். நவம்பர் 7-ந் தேதி அரசாங்கத்தைக் கைப்பற்றவேண்டியதென வரையறுத்தார். அதன்படி 1917-ம் வருடம் நவம்பர் 7-ந் தேதி லெனின் குறித்தபடியே, போல்ஷ்விக் கட்சியினர் அரசாங்கத்தைக் கைப்பற்றினர். புரட்சி வெற்றிபெற்றது.

திட்டமிடப்பட்டு, நாள் குறிக்கப்பட்டு, வெற்றிபெற்றது ருஷிய புரட்சி ஒன்றுதான். அந்தத் திட்டங்களும், நிறைவேற்றப்பட்ட நேரமும் லெனின் ஒருவராலேயே வரையறுக்கப்பட்டவைகளாகும். லெனின் இல்லாதிருந்தால் அக்டோபர் புரட்சி நடத்தப்பட்டிருக்குமா என்பதும், நடத்தப்பட்டிருந்தாலும் லெனின் அடைந்ததைப்போன்ற வெற்றியைப் பெற்றிருக்குமா என்பதும் சந்தேகமே.

லெனின் நுட்பமான அறிவும், அரசியல் நிலை பற்றிய தெளிவும், சரியான சமயத்தில் உறுதியான முறையில் காரியமாற்றும் திறமையுமே ருஷிய புரட்சியை வெற்றிபெறச் செய்தன. ருஷிய புரட்சி முதல் தொழிலாளர் அரசுக்கு அடிகோலியது, ருஷிய நாட்டை உலகில் வலிமைமிக்க வல்லரசாக்கியது, மேற்கே பிரேக் நகரிலிருந்து, கிழக்கே பீகிங் நகர் வரை பொதுவுடமை அரசுகள் அமைவதற்கு அது ஆரம்பமாயிருந்தது. இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றையே ருஷிய புரட்சி நிர்ணயிப்பதாக இருக்கிறது. அத்தகைய புரட்சியை வெற்றிகரமாக நடத்திய பெருமை லெனினைச் சார்ந்ததாகும்.

உலக வரலாற்று மேடையில் பல பெரிய மனிதர்கள்—அலெக்சாண்டர் காலத்திலிருந்து இன்றுவரை—பலர் ஏற்றப்படுகின்றனர். ஆனால் அவர்களில் ஒருசிலரே வரலாற்றின் போக்கை மாற்றியமைக்கும் வலிவும், ஆற்றலும் உடையவர்களாயிருந்தவர்கள். அவ்வாறு தம் ஆற்றலால் வரலாற்றில் முதலிடம் பெறும் ஒரு சிலரில் லெனின் ஒருவராவார்.

மறுமலர்ச்சியும் புதியகாலமும்

ஆங்கிலத்தில் (Renaissance) என்று அழைக்கப்படுவதை, மறுமலர்ச்சி என்று அருந்தமிழில் வழங்குகிறோம்.

ஒரு பொருள் மலர்ந்து, மணம்வீசி நிற்கும் போது, அது மலர்ச்சியடைந்துள்ளது என்று குறிப்பிடுகிறோம். மலர்ந்திருந்த அந்தப் பொருள் மணங்குன்றி, மங்கி, மறைந்திருந்து, பின்பு ஏதோவொரு காரணம்பற்றி மீண்டும் மலரத்தொடங்குமேயானால், அந்த நிகழ்ச்சியை மறுமலர்ச்சி என்று குறிப்பிடுகிறோம்.

மலரிடத்தே காணப்படும் மலர்தல் - பின் கூம்புதல் - மீண்டும் மலர்தல் ஆகிய தன்மைகளைப், பழம்பெருஞ் சீர்படைத்த நாடுகளிடத்தேயும் காண்கிறோம். தென்னாடு, வடநாடு, கிரேக்கம், ரோமம், சீனம் ஆகிய நாடுகளின் வரலாற்றுக் காலத்தைக் கூர்ந்து நோக்கினால், அவைகள் புகழால் மலர்ந்திருந்த காலம், மங்கிய காலம், மீண்டும் மலர்ந்த காலம் ஆகிய முக்கூறுபாடுகளை உடையனவாக இருப்பதை நன்கு தெரிந்துகொள்ளலாம். முதலில் புகழால் மலர்ந்திருந்த காலத்தைப் பழங்காலம் என்றும், இடையில் மங்கிய காலத்தை இடைக்காலம் என்றும், மீண்டும் மலர்ச்சியுற்ற காலத்தைப் புதியகாலம் என்றும், அழைக்கிறோம்.

அரசியல், பொருளாதாரம், சமூகம், கலை, அறிவியல், சமயம், நாகரிகம் ஆகிய துறைகளை எடுத்துக்கொண்டால், அந்தத் துறைகளில், இந்த நாடுகளெல்லாம், சுமாராகக் குறிப்பிடக் கூடிய ஒரு கால எல்லைக்குள் மலர்ச்சி பெற்றும், பிறகு மங்கியும், மீண்டும் மலர்ச்சிபெற்றும் வளர்ந்து வந்திருப்பதைக் காணலாம்.

தமிழகத்தை எடுத்துக்கொண்டால், கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதிவரையில், அது பழங்காலத் தன்மையைக் கொண்டிருந்தது என்னலாம். அந்தக்காலத்தில்தான் தமிழகம் குடிதழுவிக்கோலோச்சுதல், மொழி வளர்த்தல், புலவரைப் போற்றுதல், உற்பத்தி செய்தல், தொழில்பெருக்குதல், கடல்-தரை வாணிகம்புரிதல், போர்வெற்றிகொள்ளுதல், கலைவளர்த்தல், கணிதம் போற்றுதல், வானிலை யாராய்ச்சிபுரிதல், காதல்—கொடை—வீரம்—புகழ் ஆகியவற்றில் சிறத்தல் ஆகிய அருந்திறன்களைக் கொண்டிருந்திருக்கிறது. அதற்குப்பிறகு இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரையிலும் அந்தத் துறைகளிலெல்லாம் வளர்ச்சியும், சிறப்பும் குன்றிக் காணப்பட்ட நிலையையே காண்கிறோம். தமிழகத்தைப் பொறுத்தவரையில் கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து, கி. பி. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பம் வரையில் இடைக்காலம் என்ற பெயரையே குறிப்பிடவேண்டியிருக்கிறது. புதியகாலம் முழுவதும் மலர்ந்துவிட்டது என்று கூறக்கூடிய நிலைமை இன்னமும் இங்கு ஏற்படவில்லை என்றாலும், இப்பொழுதுதான் அரும்பத் தொடங்கியுள்ளது என்று கூறலாம். இடைக்காலத்தின் சாயல் பெரும்வகையில் இன்னமும் தமிழகத்தின்மீது விழுந்துகொண்டுதான் இருக்கிறது.

ஐரோப்பா கண்டத்தைப் பொறுத்தவரையில் புதிய காலத்திற்கான மறுமலர்ச்சி 15-வது நூற்றாண்டிலேயே தொடங்கப்பெற்று, பிரெஞ்சுப் புரட்சிக்குப்பின் முழுநிலை பெற்றுவிட்டது என்னலாம். கிரேக்க, ரோம நாடுகள் கி. பி. முதல் நூற்றாண்டுவரையில் பழைய காலத் தன்மைகளைக் கொண்டிருந்தன. பின் கி. பி. முதல் நூற்றாண்டுமுதல் 15-வது நூற்றாண்டு வரையில், அந்த நாடுகள், மற்ற ஐரோப்பிய நாடுகளையும் உள்ளடக்கிக்கொண்டு, இடைக் காலத்தில் இருந்துவந்தன. ஐரோப்பா கண்

டத்தில் ஏற்பட்ட புதிய காலம் அல்லது மறுமலர்ச்சியின் மணந்தான், இன்று உலகம் முழுவதும் பரவி உலகத்தைக் கமழச் செய்கிறது. மறுமலர்ச்சி இருண்ட நாடுகளை ஒளிபெறச் செய்தது; அறியாமையைப் போக்கி அறிவைப் பரப்பிற்று; குருட்டு நம்பிக்கையை ஒழித்து அறிவியல் அறிவை நிலைநாட்டிற்று; மூடப் பழக்கத்தை ஒழித்து ஆராய்ச்சி முறையை வளர்த்தது; மத வெறியைத் தணித்து வாழ்க்கை நெறியைப் புகுத்தியது; அடிமை நிலையை அகற்றி விடுதலை வேட்கையை ஊட்டிற்று; அரசாட்சியை அழித்துக் குடியாட்சியை நிறுவிற்று; மத ஆதிக்கத்தை ஒழித்து நீதி முறையை வகுத்தது; பக்தியைப் போக்கி பற்றை வளர்த்தது.

ஐரோப்பாக் கண்டத்தில் 18-ம் நூற்றாண்டிலேயே புதியகாலம் முழுத்தோற்றம் அளிக்க ஆரம்பித்துவிட்டது என்று கூறலாம். 18-ம் நூற்றாண்டில் நடைபெற்ற பிரெஞ்சுப் புரட்சி, விடுதலை வேட்கையுணர்வை அவனியெல்லாம் ஊட்டியதோடல்லாமல், புதியகால அரசியல் மாற்றங்களுக்கு முக்கிய காரணமாகவும் இருந்தது. 18-ம் நூற்றாண்டில் புதியபுதிய பொறிகள் (இயந்திரங்கள்) கண்டுபிடிப்பும், அதன் காரணமாக உற்பத்திப் பெருக்கமும், அதன் காரணமாக வாணிக வளர்ச்சியும், அதன் காரணமாகப் போக்குவரத்தும் ஏற்பட்டு, அவைகள் சிதறிக்கிடந்த உலகத்தை நெருங்கியதாகவும், நிரம்பியதாகவும் ஆக்கிப், புதியகாலத் தன்மைகளையெல்லாம் உலகில் பொருந்தியிருக்கும்படியாகச் செய்தன. ஏறத்தாழ 15-ம் நூற்றாண்டிலிருந்து 18-ம் நூற்றாண்டுவரையில் மறுமலர்ச்சியின் முயற்சிகள் ஐரோப்பாவெங்கும் முகிழ்த்தெழுந்தன எனக் கூறலாம்.

மறுமலர்ச்சிக்கான முயற்சிகள் 15-ம் நூற்றாண்டிலிருந்து தொடங்கப்பெற்றன என்றாலும், மறுமலர்ச்சி பற்றிய எண்ணம் 14-ம் நூற்றாண்டிலேயே இத்தாலியில் வேரூன்ற ஆரம்பித்துவிட்டது. ரியேன்சி என்ற இத்தாலியன் கி. பி. 1347-ம் ஆண்டில், இத்தாலியின் அரசன் ஆட்சிமுறையை மாற்றி, சிசரோ, லீவி போன்றவர்களின் நூல்களில் காணப்பட்ட பழைய குடியாட்சி முறையை நிலைநாட்ட முயன்றான். அதனால் பழைய மறைந்து கிடந்த குடியாட்சி முறை பற்றிய இலத்தீன் மொழி நூல்களைப் படிக்கவேண்டும் என்ற ஆவல், மக்களிடையே கிளர்ந்தெழுந்தது. அந்தக்காலத்தில் இத்தாலியில் இலத்தீன் மொழி படிக்கத் தெரிந்தவர்கள் மிகக் குறைவான எண்ணிக்கையினராக இருந்தனர். பிளாரன்டைன் குடியரசின் தலைவனாக வந்த கோலூசியோ சலுதாதி (1331-1406) என்பான் இலத்தீன் மொழியையும், சிசரோவின் இலக்கியங்களையும் பிளாரன்ஸ் நகரில் பரப்ப அரும் முயற்சி எடுத்துக்கொண்டான். மக்கள் பழைய நூல்களைப் புதிய ஆர்வத்துடன் படிக்க எழுச்சிகொண்டனர். விரைவில் பிளாரன்ஸ் நகர் ஒரு கல்விக் கூடமாகக் காட்சியளித்தது. அந்த நாட்களில் கான்ஸ்டாண்டிநோபில் என்ற நகரம் சிறந்த வாணிக நகரமாகவும், கீழை நாடுகளுக்குச் செல்வதற்கான வாயில் வழியாகவும், கிரேக்க அறிஞர்கள் வாழுமிடமாகவும் இருந்துவந்தது. கான்ஸ்டாண்டிநோபில் துருக்கியரால் கைப்பற்றப்பட்டபொழுது, அங்கிருந்த கிரேக்க அறிஞர்கள் ஐரோப்பாக்கண்டம் முழுவதும் சிதறியோடத் தலைப்பட்டார்கள். அவர்களில் டெமிட்ரியஸ் சைடோனியஸ், மானுயல் கிரிசோலாரஸ் என்ற இருவரும் வெனிஸ் நகரம் வந்து சேர்ந்தனர். அவர்கள் கிரேக்க மொழியையும், இலக்கண இலக்கியங்களையும், அரசியல் நூல்களையும் வெனிஸ் நகரத்திலும், பிளாரன்ஸ் பல்கலைக் கழகத்திலும் கற்றுக்கொடுத்தனர். பிளேட்டோ, அரிஸ்டாடில் போன்ற தத்துவ அறிஞர்களின் நூல்கள் இலத்தீன் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. பதினைந்தாம் நூற்றாண்டின் இடையில், பிளாரன்ஸ் நகரில் நூல் நிலையம் ஒன்று திறக்கப்பட்டு, சுமார் 5000 கிரேக்க இலத்தீன் நூல்கள் சேர்க்கப்பட்டன. பல பக்கங்களிலும் ஆள்கள் அனுப்பப்பட்டு, சேர்க்கப்பட்டவைகளே அவைகள்.

கல்வித் துறையில் மட்டுமல்லாமல் ஓவியம், சிற்பம் ஆகிய துறைகளிலும் புதியதொரு மலர்ச்சி ஏற்பட்டது. பழைய கால கிரேக்க—ரோம சிற்பங்களையும், ஓவியங்களையும், வேலைப்பாடுகளையும் சேர்த்து, புதிய ஆர்வத்தோடு அவற்றைப் புதுப்பிக்கத் தலைப்பட்டார்கள். ஜியார்ஜியோன், டிடியன், வெரோனீஸ் ஓவியக் கலையிலே புதிய மலர்ச்சியை உருவாக்கினார்கள். லியனார்டோ ட வின்சி, மைகேல் ஆஸ்ஜலோ, ராபெல் ஆகிய மூவரும் அழியா மறுமலர்ச்சி ஓவியங்களைப் பிளாரன்ஸ் நகரிலிருந்து தீட்டி, அகில உலகத்திற்கு வழங்கினார்கள். லியனார்டோ சிறந்த ஓவியக் கலைஞனாக

மட்டுமில்லாமல், சிற்பக்கலை, கட்டிடக்கலை, தத்துவக்கலை, அறிவியல், இலக்கியம் ஆகியவற்றிலும் சிறந்த புலமை நிரம்பினவனாகக் காட்சியளித்தான். சுருங்கக் கூறினால் பிளாரன்ஸ் நகரம் மறுமலர்ச்சி இயக்கத்தின் ஊற்றாகக் காட்சியளித்ததோடு மட்டுமல்லாமல், மறுமலர்ச்சியின் எழிற் கூடமாகவும் விளங்கியது. அங்குக் காதல், கவிதை, காட்சி செழித்துக் கொழித்தன. மறுமலர்ச்சிக்காரர்கள் என்று கருதக்கூடிய அவர்கள்; தாங்கள் வளர்த்த கலைகளில், புதுமை மணம் கமழும் வண்ணம், அக்கால சூழ்நிலையைப் படம்பிடித்துக் காட்டினார்கள். மறுமலர்ச்சி எண்ணத்தை முதன் முதலில் உருவாக்கி உலகுக்கு ஈந்த நாடு இத்தாலியேயாகும்.

ஐரோப்பாவில் 1440-க்கும் 1520-க்கும் இடையில் ஏற்பட்ட சில நிகழ்ச்சிகள், புதிய காலம் தோன்ற முக்கிய காரணங்களாகவும், மறுமலர்ச்சி இயக்கம் பரவ ஏற்ற வாய்ப்புகளாகவும் இருந்தன. அவற்றில் முதல் நிகழ்ச்சி அச்சுப்பொறி கண்டுபிடிப்பாகும். செய்தி அறியவேண்டும்—கருத்துத் தெரியவேண்டும் என்று மக்களிடத்தே ஏற்பட்டிருந்த ஆவலை, அச்சுப்பொறி, எளிதில், ஏற்றமுறையில் நிறைவேற்றிவைத்தது. மதக்கொள்கைகளையும், தத்துவக் கருத்துக்களையும், பழையகால இலக்கியங்களையும் ஒவ்வொருவரும் தாங்களாகவே படித்தறிந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது. அறிவும், செய்தியும் எங்கும், எல்லோரிடமும் எளிதாகவும் விரைவாகவும் பரப்பப்பட்டன. அறிவை எந்தத் தனிப்பட்டக் கூட்டத்தாரும் தங்களுக்கே உரிமையுடையதொரு சரக்காக வைத்துக்கொண்டு, விலைபேசி வாழமுடியாமற் போயிற்று. புதியன அறியவேண்டும் என்ற ஆவலும், எதைப்பற்றியும் குறைநலம் பார்க்கும் பண்பும் மக்களிடத்தே ஆர்த்தெழுந்தன. அரசனது அவைக்கள நிகழ்ச்சியிலிருந்து, சந்தைக்கூட களவு வரையில் எல்லாவற்றையும் பொதுமக்கள் அறிந்துகொள்ளும்படியான வாய்ப்பை அச்சுப்பொறி சிறுகச் சிறுக ஏற்படுத்தியது. இந்த வகைகளிலெல்லாம் அச்சுப்பொறி ஆற்றிய தொண்டு மறுமலர்ச்சிக்கு அளப்பறிய துணையாக இருந்தது. எனவே தான், அச்சுப்பொறிக் கண்டுபிடிப்பை மறுமலர்ச்சிக்கான முதல் நிகழ்ச்சியாகக் கொள்கிறோம்.

இரண்டாவது நிகழ்ச்சி கான்ஸ்டாண்டிநோபிள் வீழ்ச்சியாகும். 1453-ம் ஆண்டில் துருக்கியர் கான்ஸ்டாண்டிநோபிலைப் பிடித்துக் கொண்டதன் விளைவாக, அங்கிருந்த கிரேக்க அறிஞர்கள் ஐரோப்பாவின் மற்றப் பகுதிகளுக்குச் சிதறி ஓடவும், அங்கெல்லாம் கல்வியறிவு பெருகவும், மத—தத்துவ—இலக்கண—இலக்கிய நூல்களைப் பொதுமக்களே படித்து அறியவும் ஆன நிலைமைகள் ஏற்படலாயின. மறுமலர்ச்சிக்கான பொது அறிவையும், பெற இந்த நிகழ்ச்சி முக்கிய எதுவாக இருந்தது.

மூன்றாவது நிகழ்ச்சி கொலம்பஸ் புதிய கண்டமாகிய அமெரிக்காவை 1492-ம் ஆண்டில் கண்டுபிடித்தது. இந்தக் கண்டுபிடிப்புக்குப்பிறகுதான் கடல்கடந்து புதிய புதிய நாடுகளையும், புதிய புதிய கடல் வழிகளையும் கண்டுபிடிக்கவேண்டும் என்ற ஆர்வமும், பொருள் திரட்டவேண்டும் என்ற ஆவலும் மேற்கு ஐரோப்பியா நாடுகளிடையே பொங்கி எழுந்தன. பலப்பலர் இந்த முயற்சியில் இறங்கினர், கடல்கள்தோறும் பல்வேறு நாட்டுக் கப்பல்களும் மிதக்கலாயின. நாளடைவில் சரக்குக் கப்பல்களோடு, சண்டைக் கப்பல்களும் ஆதிக்கத்தை ஆங்காங்கு நிலைநாட்டப் புறப்பட்டன. உலகவாணிகம் பெருகிற்று; குடியேற்ற நாடுகள் தோன்றலாயின; உலக நாடுகளுக்கிடையே தொடர்பு ஏற்பட்டது; உலக நாடுகள் ஒன்றையொன்று அறிந்து கொண்டன; புதியகாலம் பிறந்தது

நான்காவது நிகழ்ச்சி, போப்பாண்டவரை எதிர்த்து மார்ட்டின்லூதர் கிளம்பியது. பதினைந்தாம் நூற்றாண்டிக்கு முன்பெல்லாம் போப்பாண்டவர், ஐரோப்பிய அரசர்களையும், மக்களையும் தன்னிச்சைப்படி ஆட்டிப்படைக்கும் ஒரு பெரிய ஆதிக்கக்காரராகக் காட்சியளித்து வந்தனர். பழைமைப் பிடியிலிருந்தும், மதப் பிடியிலிருந்தும் மக்களை ஆடாமல், அசையாமல் இருக்கும்படிசெய்து, தமக்குக் கீழ்ப்படுத்தித், தம் ஆதிக்கப் பெருவாழ்வைப் பெருக்கிக் கொள்வதிலே கண்ணுங்கருத்துமாக இருந்து வந்தனர்.

(அடுத்த இதழில் முடியும்)

அறிவியல்

நிறம் செய்யும் திறம்

இயற்கையிலும் செயற்கையிலும் செறிந்தும் சிதறியும் காணப்படும் வண்ணங்கள், வாழ்வுக்கு வனப்பையும், கண்ணுக்கு இனிமையையும், உள்ளத்திற்கு உவகையையும் தருகின்றன. பல்வேறு நிறங்கள் கண்டு மயங்காதாரும், மனமகிழ்ச்சி கொள்ளாதாரும் யார்? ஒருவரும் இல்லை! எல்லோரும் ஏன் எல்லா உயிர்களும் வண்ணங்களில் திளைத்துத்தான் கிடக்கின்றன!

நீலவான்-கடல்-மலை, பச்சைவெளி, செக்கர் வானம், வெள்ளிய அருவி வெண்மணற் பரப்பு, வெண்ணிலா, கருமுகில், வானவில் ஆகியவற்றில் தங்கள் உணர்வை ஈடுபடுத்திக் கொள்ளாதார் யார்?

இயற்கை பல்வேறு நிறங்களை வாரியிறைக்கிருக்கும் எண்ணற்ற அருமையான காட்சிகளைப் பார்க்கிறோம். பல வண்ண மலர்களை விதவிதமாகப் பூத்துக் குலுங்க வைத்துக் கொண்டிருக்கும் மரம் — செடி — கொடிகள், வண்ணத்தோகை விரித்தாடும் மயில், ஐந்து வண்ணங்களைக் காட்டி நிற்கும் கிளி, பல நிறங்களோடு பறந்துதிரியும் வண்ணாத்திப் பூச்சி, வண்ணக்கோழி, நீலப்பறவை, செம்பட்டுப் பூச்சி ஆகியவை போன்றவைகள் காண்போரைத் தம்பால் ஈர்த்து நிறைத்துகின்றன.

செயற்கை வண்ணங்கள் மாடமாளிகைகளிலும், படக்காட்சிகளிலும், திரைகளிலும், ஆடை அணி வகைகளிலும் செறிந்திருந்து மன மகிழ்ச்சியூட்டுகின்றன.

உலகை வெறுத்து பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டிருப்பதாகச் சொல்லிக்கொள்ளப்படும் துறவிகள்கூட வண்ணங்களில் மயங்காமலில்லை. புத்த துறவிகள் மஞ்சள் ஆடையையும், இந்து மதத் துறவிகள் காவி ஆடையையும், முஸ்லீம் துறவிகள் கருப்பு ஆடையையும், கிருத்துவ துறவிகள் வெள்ளை—கருப்பு—காப்பிநிற ஆடையையும் அணிவதிலே மதிப்பும் மகிழ்ச்சியும் கொள்கிறார்கள்.

இந்துமத பக்தர்கள் தங்கள் ஆண்டவர்களை 'செந்நிற மேனியான்' என்றும், 'நீலமேனி சாமள வர்ணன்' என்றும், 'பச்சைமா மலை போல் மேனி' என்றும், 'கருநிற வண்ணன்' என்றும், 'கார்முகில் வண்ணன்' என்றும், 'அல்லை யாண்டமைந்தமேனி' என்றும் கூறி அழைத்துக் கொள்வதிலே பூரிப்பும், பெருமையும் கொள்கின்றனர்.

ஒவ்வொரு நாடும், அந்தந்த நாட்டிலுள்ள கட்சிகளும் தங்கள் தங்களுக்கு ஒரு நிறமோ அல்லது பல நிறங்களோ கொண்ட கொடிகளை ஏந்துவதில் கண்ணுங் கருத்துயாக இருக்கின்றன.

ஒவ்வொரு நாட்டினரும், ஒவ்வொரு இனத்தினரும் ஆடை உடுத்துவதில் பலவித வண்ணங்களைக் கொள்ளுவதில் கவலையாக இருந்து, பக்திக்கு அறிகுறியாக, திருமணத்திற்கு அறிகுறியாக, சாவுக்கு அறிகுறியாக, விருந்துச் சாப்பாட்டுக்கு அறிகுறியாக என்று ஒவ்வொரு வண்ணத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறார்கள்.

உலகம் முழுவதும் சிவப்பை அபாயம்-புரட்சி ஆகியவற்றின் அறிகுறியாகவும், கறுப்பை இழிவு—இழவு ஆகியவற்றின் அறிகுறியாகவும், வெள்ளையைச் சமாதானத்தின் அறிகுறியாகவும், இந்திய துணைக்கண்டத்தில் மஞ்சளை புனிதத்தின் அறிகுறியாகவும் கொள்ளுகின்றனர்.

துப்பாக்கிப் படை, பீரங்கிப் படை, கப்பற் படை, விமானப்படை போன்ற பல்வேறு படைகளின் வீரர்களுக்குத் தனித்தனி நிறமுள்ள ஆடைகளையும்—அடையாளங்களையும் வழங்கி வேறுபாடு உணர்த்திச் சிறப்பித்துக் கொள்கிறார்கள்.

பல்வேறு துறை அதிகாரிகளையும், சிப்பந்திகளையும் வேறுபடுத்திக் காட்ட சிகப்புத் தொப்பி, நீலத் தொப்பி, வெள்ளைத் தொப்பி,

காக்கித் தொப்பி, ஆகியவற்றை அணிந்து கொள்ளுகின்றனர்.

விளையாட்டுப் பந்தயங்களில் ஈடுபடுபவர்களும் தங்கள் தங்கள் பிரிவைத் தனியே உணர்த்திக் காட்ட, தனித்தனி வண்ண ஆடைகளை உடுத்திக் கொள்கின்றனர்.

ரூபாய் நோட்டுகளையும், அஞ்சல் தலைகளையும் எடுத்துக்கொண்டாலும் அவற்றின் வேறுபாட்டை உணர்த்த நிறங்கள் கையாளப்படுகின்றன.

சினிமா டிக்கட்டுகள், நாடக டிக்கட்டுகள், போன்றவைக் கண்டாலும் கட்டணங்களின் வேறுபாட்டிற்கு ஏற்ப நிற வேறுபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இப்படியாகப் பார்த்துக்கொண்டே போனால் வண்ணங்கள் மன மகிழ்ச்சிக்கு மட்டுமல்லாமல், வாழ்க்கையின் அமைப்புக்கும் இன்றியமையாதனவாக அமைந்திருக்கின்றன.

வண்ணங்களை ஒரு குறிப்பிட்ட அளவிலும், முறையிலும் வகையிலும் காணும்போதுதான் மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படுகிறது. அளவும், முறையும், வகையும் ஏறத்தாழப் போய்விடுமானால், அவ்வளவு மகிழ்ச்சி ஏற்படுவதில்லை.

ஒவ்வொரு வண்ணமும் ஒவ்வோர் இடத்தில், ஒவ்வோர் பொருளுக்கு பொருந்துவதாக இருக்கும் போதுதான், அழகும், கவர்ச்சியும், மகிழ்ச்சியும் பயப்பனவாக இருக்கும். கறுப்பை காக்கையின் உடலிலே காணும் போது அது அழகு பயப்பதில்லை; மனிதனின் விழியிலே காணும்போது அழகு தருகிறது. சிவப்பை வான்கோழியின் தாடையில் காணும்போது அது கவர்ச்சி தருவதில்லை; கிளியின் மூக்கிலே காணும்போது கவர்ச்சி தருகிறது. மஞ்சளைக் கழிவுப் பொருளில் பார்க்கும்போது அது வெறுப்பு ஊட்டுகிறது; கோழிக் குஞ்சின் உடலில் பார்க்கும்போது மகிழ்ச்சி ஊட்டுகிறது.

நிறங்கள் அவை சேர்ந்திருக்கும் பொருள்களைப் பொறுத்தும், அப்பொருள்கள் இருக்கும் இடங்களைப் பொறுத்தும் விருப்பு ஏற்படுவதும் வெறுப்பு ஏற்படுவதும் நேர்கின்றன.

நிறங்கள் ஒன்றோ அல்லது பலவோ பொருள்களோடு சேர்ந்து காணப்படும்போது, ஒரு குறிப்பிட்ட அளவோடும், முறையோடும், வகையோடும் காணப்படும்போதுதான் கவர்ச்சியும் மகிழ்ச்சியும் ஏற்படுகின்றன; இல்லாவிட்டால், அளவு—முறை—வகை ஆகியவைகளில் கோளாறு ஏற்பட்டிருந்தால், அவைகள் வெறுப்பையும், வேதனையையும்தான் தரும்.

பொதுவாகப் பார்க்கும்போது, மக்களுக்குப் பயன்பட்டுவரும் வண்ணங்கள் சிலவற்றைச் சிலவிடங்களில் பார்க்கும்போது விருப்பத்தையும், வேறு சிலவற்றை அதேவிடங்களில் பார்க்கும்போதும் வெறுப்பையும் தருவதைப் பார்க்கிறோம். இதற்கு அவரவர்கள் சிறுபிள்ளைப் பருவத்திலிருந்து வளர்த்து வைத்துக்கொண்டிருக்கிற மனப்பான்மை ஒருவகையில் காரணமாகும்.

நிறங்களுக்கும், மக்களுடைய மனதுக்கும் நெருங்கியதொடர்பு இருப்பதை வாழ்க்கையில் நன்கு காண்கிறோம். நிறங்களில் சில விருப்பையும், வேறு சில வெறுப்பையும் தருவதைப் பார்க்கிறோம். விருப்பும், வெறுப்பும் தரும் காட்சிகள் சிலவேளைகளில் எல்லா மக்களுக்கும் பொதுவாகவேப் படுகின்றன; சிலவேளைகளில் அவரவர் மனப்பான்மைக்குத் தகுந்தாற் போல மாறியும்விடுகின்றன. வண்ண உடுப்புகளைத் தாங்கிவரும் பெண்ணைப் பார்ப்பதிலே மகிழ்ச்சி காட்டியவர்கள், பின்னர் அந்த வண்ண உடுப்புகளை வெறுப்பவர்களாகவும் மாறிவிடுகிறார்கள்.

நிறம் கண்ணைக் கவரும் திறத்ததாகவும், கண்ணை வெருட்டும் திறத்ததாகவும் காட்சியளிக்கக் காண்கிறோம்.

நிறத்திற்கும் மனிதனுடைய உள்ளத்திற்கும் உள்ள தொடர்பைப்பற்றி ஆராய்ந்து காணும் ஆராய்ச்சி, அமெரிக்காவில் இப்பொழுது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது அறிவியலில் (விஞ்ஞானத்தில்) ஒன்றாக இந்நாளில் கருதப்பட்டுவருகிறது. ஒவ்வொரு நிறமும் எந்த அளவுக்கு மக்களுடைய வாழ்க்கையையும், உள்ளநலத்தையும், உடல் நலத்தையும் பாதிக்கிறது என்பதைத் தனித்தனி நிறமாக எடுத்து, அறிவியல் அறிஞர்கள் சிலர் ஆராய்ந்து வருகிறார்கள்.

ஒரே உணவை, ஒருவித நிறத்தில் ஒரு மனிதன் முன்வைக்கும்போது, அது அவனுக்கு வழக்கமாகக் கொடுக்கும் இன்பத்தைவிட மிக்க

இன்பத்தைக் கொடுக்கிறது என்றும், அதே உணவை வேறு ஒரு நிறத்தில் அவன் முன் வைக்கும்போது, அதைக் காணும் அவன் வெறுப்புற்று, உள்ளநலங்கெட்டு, உடல்நலிவு கொள்கிறான் என்றும் நிற அறிவியல் அறிஞர்கள், ஆராய்ச்சியின் பயனாகக் கண்டறிந்திருக்கிறார்கள்.

வீடுகளின் சுவர்கள், கதவுகள், நிலைகள், சாளரங்கள் ஆகியவற்றில் அழகுக்காகப் பூசப்படும் நிறங்களில் சில கண்ணுக்கு இனிமையும், உள்ளத்திற்கு உவகையும் தருவனவாக அமைந்துவிடுகின்றன என்றும், வேறு சில மனத்தளர்ச்சியை உண்டாக்கி மனநோயைத் தந்துவிடுகின்றன என்றும் பல எடுத்துக்காட்டுகளால் அவர்கள் கண்டறிந்தார்கள். சில வீடுகளில் சிலர் ஓயாமல் மனவேதனையும், வெறுப்பும்கொண்டு நடமாடுவதற்கு, முதலில் காரணம் ஏதும் தெரியாமல் திகைத்து, இறுதியில் அந்த வீடுகளில் பூசப்பட்டிருக்கும் வண்ணங்களே அத்தகையோரது மனநோய்க்குக் காரணம் என்பதைக் கண்டறிந்தார்களாம். அத்தகையோரை வேறு வண்ணம் பூசப்பட்ட இடத்தில் கொண்டுபோய் உட்காரவைத்தால் அவர்களுக்கு மனநோய் ஏற்படுவதில்லையாம்.

மனதிற்குப் பிடிக்காத வண்ண ஆடைகளை உடுத்திக்கொண்டு அடிக்கடி காட்சியளித்தல், சில காதலன்—காதலியரின் காதல் முறிவுகளுக்குக் காரணமாயிருக்கிறது என்றும் அந்த அறிவியல் அறிஞர்கள் தம் ஆராய்ச்சியின்போது கண்டார்களாம். காதலனுக்குப் பிடிக்காத வண்ண உடைகளை காதலி உடுத்துவதும், காதலியின் மன உணர்வுக்குப் பொருந்தாத உடுப்புகளைக் காதலன் அணிவதும், முதலில் அவர்களுக்கு அவர்களை யறியாமலே வெறுப்புணர்வைத் தந்து, பின்னர் காதல் முறிவுக்கே காரணமாகியிருக்கின்றன.

அமெரிக்க நிற அறிவியல் அறிஞர் சாமுவேல் ஜி. கிப்பென் என்பார் தம் நண்பர்களுக்குச், சிகாகோ ஹோட்டல் ஒன்றில், விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தாராம். சுவைக்கினிய உணவும், ஒயினும் கொண்டுவந்து பரிமாறப்பட்டதாம். விளக்கு வெளிச்சத்தில் மாறுதல் ஏற்படுகிறவரையில், எல்லாம் இனிதாக நடந்தேறிவந்ததாம். திடீரென்று விளக்கு வெளிச்சத்தின் நிறம் மாறவே, முதலில் ஒருவர் நலிவடைய ஆரம்பித்தாராம், அவரை அடுத்து ஒருவர்பின் ஒருவராக ஏறத்தாழப் பாதிப்பேர்கள் நலிவடைந்தார்களாம். மற்றவர்களால் மேற்கொண்டு உணவு சாப்பிட முடியவில்லையாம்.

உணவுவகைகள் நன்றாகத்தான் சமைக்கப்பட்டிருந்தனவாம்; உணவு உட்கொள்ளும் வேட்கையும் எல்லோரிடமும் இருந்ததாம்; என்றாலும் உணவு உட்கொள்ள முடியவில்லையாம்! காரணம்: அந்த உணவு வகைகளின் நிறங்களெல்லாம் மாறியிருந்ததேயாகும்!

நிறம், மனிதனுடைய உள்ளத்தை எந்த அளவுக்குப் பாதிக்கிறது என்பதைக் கண்டறியவே, அறிவியல் அறிஞர் கிப்பென், திடீரென்று நிறங்கள் மாறுதல் அடையும்படியான ஒரு ஏற்பாட்டைச் செய்தார். அவர், சாதாரண விளக்குகளையெல்லாம் அணைத்துவிட்டு, முக்கோண வடிவமுள்ள கண்ணாடி ஸ்படிகங்கள்மூலம் விளக்கொளியைத் தனித்தனியாகப் புகச்செய்து, வெளியே விரிந்து எழும் நிறங்களில் சிவப்பையும், பச்சையையும் மட்டும் தடுத்து நிறுத்திவிட்டு, மற்ற நிறங்களை அறை முழுவதும் வீசிநிற்கும்படிச் செய்தார். அந்த நிறங்களில் பட்ட காய்கறி தீர்ந்த சிவப்பாகவும், மீன் இறைச்சித் துண்டுகள் வெளிறிய சாம்பல் நிறமாகவும், கண்ணாடிக் குவளைகளிலுள்ள பால் இரத்தச் சிவப்பாகவும், பலவித உணவு வகைகளைக் கலந்துவைத்த அவியல் மங்கிய நீலமாகவும் காட்சியளித்தன. பச்சை நிறத்தில் முதலில் காட்சியளித்த பட்டாணிக் கடலை, கடுங்கறுப்பாகக் காட்சியளித்தது. கண்ணாடிக் குவளையொன்றில் வைத்திருந்த பட்டாணி கருஞ்சிவப்பாக மாறியிருந்தது.

மீண்டும் சாதாரண விளக்குகளைப் போட்ட போது, எல்லாம் பழைய நிலைமைக்கு வந்தன.

நிறவேறுபாடு வெறும் பார்வையுணர்ச்சியை மட்டும் பாதிக்காமல், அதோடு தொடர்புடைய சுவையுணர்ச்சியையும், தொடும் உணர்ச்சியையும், நுகரும் உணர்ச்சியையும் பெரும் அளவுக்குப் பாதிக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டவே அந்த ஏற்பாடு செய்ததாக கிப்பென் கூறினார்.

கிப்பென் போலவே வோவார்டு கேட்சம் என்பவரும் நிறம்பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பவர். ஒருபொழுது, ஒரு பெண்மணி அவரிடம் வந்து, " நான் ஒரு விருந்து வைக்கப் போகிறேன். அந்த விருந்தை இனிமையான

தாகவும், சிறந்ததாகவும் ஆக்குவதற்கு வழி ஒன்று சொல்லித்தரவேண்டும்" என்று கேட்டுக்கொண்டாள். அதற்குக் கேட்சம் "மெஜண்டா நிற விளக்குகளைக் கொண்டு முயற்சி செய்து பார். மூன்று அல்லது நான்கு ஆயிரம் வாட் விளக்குகளைப் பொருத்து. அவற்றை மெஜண்டா நிறக் கண்ணாடிகளால் மூடித் தரையைச் சுற்றிலும், மேஜைக்கடியிலும், மேலேயும் வை. பிறகு மற்ற சாதாரண விளக்குகளையெல்லாம் அணைத்துவிடு. மேற்கொண்டு என்ன நடக்கிறது என்று பார்!" என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

விருந்து முடிந்ததற்குப் பிறகு அந்தப்பெண்மணி "என்ன வியப்பு தெரியுமா! பெண்டிரெல்லாம் மகிழ்ச்சி மயமானார்கள்; ஆடவரெல்லாம் உணர்ச்சி வயப்பட்டார்கள்; உணவு மிகவும் சுவை தருவதாக இருந்தது" என்று கூறினளாம்.

"மெஜண்டா மென்மையும், இனிமையும் தருவதாக இருப்பதால், அது மனதையும் மகிழ்ச்சிகரமாக ஆக்குவதோடு, உணவையும் சுவையுள்ளது போல் காட்டுகிறது. சாதாரண விருந்தோடு மெஜண்டா நிறத்தையும் சேர்த்துக் கொண்டால், இருபெரு விருந்துகளுக்குச் (Cocktails) சமமாகிவிடும்" என்று கேட்சம் பதிலிறுத்தாராம்.

மனநோய்களை நீக்குவதற்கு நிறம், பெரும் வகையில், இற்றை நாளில் பயன்படுத்தப்படுகிறது. சில நிறங்கள் மனத்திற்கு ஊக்கம் அளித்து, உணர்ச்சி ஊட்டுகின்றன; வேறு சில மனத்திற்கு வெறுப்பளித்து, வாட்டத்தை உண்டாக்குகின்றன. நல்ல தீர்ந்த சிவப்பு சிலர்க்கு உணர்ச்சி அளிக்கின்றது; வேறு சிலர்க்கு அருவருப்பைத் தருகின்றது. நல்ல தீர்ந்த நீலம்—ஊதா சிலர்க்கு வாட்டத்தை ஊட்டுகின்றது. ஆரஞ்சு சிவப்பு சிலர்க்கு மனநலிவைத்தந்து, பிறகு நரம்பு தளர்ச்சியை உண்டாக்குகிறது.

எதிரே பொருளும் காரணமும் இல்லாத நிலையில், எப்பொழுதும் தமக்குத் தாமே பேசிக்கொண்டிருக்கும் மனநோய் பிடித்தவர்களுக்குக் குரோம் மஞ்சள் நிறம் தக்க மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறதாம். சில பைத்தியக்கார ஆஸ்பத்திரிகளில், அப்படிப்பட்ட நோயாளர்களைத் திருக்த, குரோம் மஞ்சள் கொண்ட சூழ்நிலை, அவர்கள் கண்களில் எப்பொழுதும் படும்படிச் செய்கிறார்களாம். சூரிய வெளிச்சம் சரியாகப்படாத நாட்களில், இந்த நோயாளர்கள் மிக்க அரிப்பாளர்களாகவும், துன்பங் கொடுப்பவர்களாகவும் மாறிவிடுவதுண்டாம். அந்த நேரத்தில், மஞ்சள் ஆரஞ்சு வண்ணம் தீட்டப்பட்ட ஒரு பெரிய அறைக்கு அழைத்துச் சென்று, அவர்களை உட்கார வைத்தால், அவர்கள் நல்ல வெளிச்சமுள்ள நாட்களில் நடந்துகொள்வதைப்போல நடந்து கொள்கிறார்களாம்.

நியூயார்க் நகரத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தி எப்பொழுதும் மனவாட்டமுள்ளவளாகவும், மன அருவருப்புக் கொண்டவளாகவும் காணப்பட்டாள். அவள் உடல் கூறுகளை ஆராய்ந்து பார்க்கும்போது, பழுதோ, நோய்க் கிருமிகளோ காணப்படவில்லை. ஆனால், அவள் வீட்டை விட்டு வெளியே புறப்பட்டால், மன நோய் தீர்ந்து மன அமைதியோடு விளங்குவாள். இதற்குக் காரணம் என்னவாக இருக்கக்கூடும் என்று டாக்டர் ஆராய்ந்து பார்க்கும்போது, அவள் புழங்கும் அறையும், படுக்கும் அறையும் ஊதாவும மங்கிய சிவப்பும் கலந்த வண்ணத்தால் பூசப்பட்டிருப்பதே என்று முடிவு செய்தார். அந்த அறைகளின் நிறங்கள் பச்சையாகவும், மஞ்சளாகவும் மாற்றப்பட்டபோது, அவளுடைய நிலைமைகளில் முற்றிலும் நல்ல மாறுதல் காணப்பட்டது. இப்படியாக நிறம்பற்றிய அறிவியல் ஆராய்ச்சியை அமெரிக்க டாக்டர்கள் நல்ல முறையில் நடத்தி, மக்களுக்கு ஏற்றவகையில் நடேற்றி வருகிறார்கள்.

மனத்திற்குப் பிடித்த வண்ணங்களைத் தேர்ந்தெடுப்பதிலும், அவைகளை ஏற்றபடி வீடுகளிலும், பொருள்கள் மீதும் பூசிக்கொள்வதிலும், மனதிற்கு இனிமைதரும் வண்ண ஆடைகளை மட்டுமே உடுத்திக்கொள்வதிலும், மனதிற்குகந்த வண்ண ஒளிவிளக்குகளைப் பயன்படுத்திக் கொள்வதிலும் மக்கள் சற்று மிக்க அக்கறை காட்டுவார்களேயானால், மன அரிப்பும், மன வேதனையும் ஏற்பட வழியிருக்காது; வேறு காரணங்களால் ஏற்படும் மனவாட்டத்தையும், தளர்ச்சியையும் போக்கும் அரும் மருந்தாகவும் அது அமைந்துவிடும்.

வீண் பெருமை

ஒரு நாட்டின் படைவீரர்கள், முதலில் பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, பின் ஒவ்வொரு பெரும்பகுதியும் படிப்படியாகச் சிறு சிறு குழுக்கள் வரைப் பிரிக்கப்படும். கடைசி சிறு பிரிவுக்குக் கார்ப்பரொல் என்பவன் தலைவனாக இருப்பான். படைகள் எல்லாவற்றுக்கும், தலைமைத் தளபதி (கமாண்டர் இன் சீப்) என்பவர் மேற்பார்வை புரிந்துவருவார்.

அமெரிக்க விடுதலைப் போராட்டத்தின் போது. அமெரிக்காவின் படைவரிசையில் ஒரு கார்ப்பரொல் இருந்தான். அவன் தனக்குக் கிடைத்த சிறு பதவியிலேயே அதிக ஆதிக்கத்தையும், ஆடம்பரத்தையும் காட்டுவதில் முனைந்திருந்தான். ஒருசமயம் அவனுடைய வீரர்கள் ஒரு பாலத்தைப் பழுது பார்த்துக் கொண்டிருந்தனர். ஒரு பக்கத்தில் நான்கு பேர் சேர்ந்து ஒரு பெரும் மரத்தைப் புரட்டி வைப்பதில் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தனர். அந்த மரத்தைச் சிறிது அசைத்து உயர்த்திய போதிலும், அந்த நான்குபேரால்மட்டும் தூக்கி வைக்க முடியவில்லை. இன்னும் ஒருவர் கை கொடுத்தால், அதைத் தூக்கிவிடலாம். பக்கத்தில் அந்தப் பிரிவின் தலைவனான கார்ப்பரொல் நின்றுகொண்டிருந்தபோதிலும், "தூக்குங்கள்! இன்னுங் கொஞ்சம்! உம்." என்று கூவிக் கொண்டிருந்ததைத் தவிர, வேறு வகையில் உதவிசெய்யவில்லை. அந்தச் சமயத்தில், அந்த வழியாக குதிரையில் ஒரு போர்வீரன் வந்து கொண்டிருந்தான். நான்குபேர் மட்டும் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்து, சும்மா நின்றுகொண்டிருந்த தலைவனிடம் வந்து "ஏன், ஐயா! பேசாமல் நின்றுகொண்டிருக்கிறீர்கள்? நீங்களும் உதவிசெய்தால், அந்த மரத்தைப் புரட்டிவிடுவார்களே!" என்று குதிரைவீரன் கேட்டான். அந்த கேள்வி நின்றுகொண்டிருந்தவருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது, "நான் அவர்களை மேற்பார்வையிடும் தலைவன், தெரியுமா?" என்று பதிலளித்தார்.

"அப்படியா! எனக்குத் தெரியாது. மன்னிக்கவேண்டும்!" என்று குதிரைமேலிருந்த வீரன் கீழே இறங்கி, தொப்பி எடுத்து வணக்கம் செலுத்திவிட்டு, மரத்தைப் புரட்டிக் கொண்டிருந்தவர்களோடு சேர்ந்துகொண்டான். ஐந்துபேரும் கூடி மிகவும் கஷ்டப்பட்டு, மரத்தைத் தூக்கிக்கொண்டுபோய் பாலத்தருகில் வைத்தனர். வேலை முடிந்ததும், வீரன் நெற்றியில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டு, முதலவனிடம் சென்று, "ஐயா! இதைப்போலக் கடினமான வேலையிருந்து, இன்னும் ஓர் ஆள் தேவையிருந்தால், படைகளின் தலைமைத் தளபதிக்கு செய்தியனுப்புங்கள், அவர் வந்து மறுமுறையும் உதவிசெய்வார்" என்று குதிரையின்மீதேறிக்கொண்டு, போய்விட்டான். அதைக்கேட்டதும், அந்தச் சிறு படைத்தலைவன், ஆச்சரியத்தாலும், பயத்தாலும் வாயடைத்து, குதிரை போகும் திக்கை நோக்கிப் பார்த்துக்கொண்டேயிருந்தான்.

குதிரைமேல் வந்து மரத்தைத் தூக்கி நிறுத்தியவர் வேறு யாருமில்லை. அமெரிக்கப் படைகளின் தளபதியான வாஷிங்டன் அவர்தான். சாதாரண போர்வீரனுக்கு அடுத்தபடி பதவி வகித்தவனுக்கு தன் பதவிக்குக் கீழ்ப்பட்ட வேலையென்று தோன்றியபோதிலும், தளபதி வாஷிங்டனுக்கு சாதாரணப் போர்வீரர்களுடன் சேர்ந்து சிறு காரியமொன்றைச் செய்வது அவமானமாகப்படவில்லை.

தையற்கலை

[கே. பி. சுந்தரம் G. C. T.]

ஜான்ஸி ப்ளவுஸ்

பெண்களில் சிலர் அணிகிற முழுநீளக் கையுள்ள ப்ளவுஸ்தான் ஜான்ஸிப்ளவுஸ்! இது வடநாட்டில்தான் பெரும்பாலும் அணியப்படுகிறது. நமது நாடு வெப்ப நாடாகையால் அந்த (நாகரீக) உடை நமக்கு அவ்வளவு வசதியுடையதாகாது. எனினும் சில மாணவிகள் அதைப் பெரிதும் விரும்பி அணிவதைக் காண்கிறோம். அதற்கேற்பவே அந்த உடையும்-நீளம் இடுப்போடு நின்று (முழங்கால்வரை ஜிப்பா போன்றிருந்த உயரம் குறைக்கப்பட்டு) நமது பெண்களுக்கும் ஓரளவு வசதியாக அமைக்கப்பட்டு வருகிறது. அதன் விளக்கமே இது.

முன்பக்கம் சதுரவெட்டு (டைமன்கட்) உடையதாய் வட்டகழுத்து (ரவுண்ட்நெக்) டன், லேஸ் (முடிப்பு கயிறு) பொருத்தப் பெற்று முழுநீளக் கையும் கொண்ட ப்ளவுஸ் அமைப்பிற்கும், காலர் கொண்ட முழுநீளக்கையுடைய ஜான்ஸிப்ளவுஸ் அமைப்பிற்கும், காலர் கொண்ட முழுநீளக்கையுடைய ஜான்ஸிப்ளவுஸ் அமைப்பிற்கும் உரிய விளக்கப்படம்.



அளவுகள் :

இடுப்புவரை முதுகு நீளம்	14 அங்.
முழு நீளம்	18 ,,
பாதித்தோள்	$6\frac{1}{4}$,,
கை முழுநீளம்	22 ,,
மார்பு சுற்று அளவு	34 ,,

முன்னங்கை சுற்று அளவு(கப்பட்டன்) $6\frac{1}{2}$ அங்

கழுத்து சுற்றளவு $13\frac{1}{2}$ அங்.

1-ல் இருந்து 0 வரை $18\frac{1}{4}$ அங். (முழு நீளம் $+\frac{1}{4}$ அங்)

2-ல் இருந்து 0 வரை $7\frac{1}{4}$ அங். ($\frac{1}{4}$ மார்பளவில் $1\frac{1}{4}$ அங். குறைவு)

3-ல் இருந்து 0 வரை $2\frac{3}{4}$ அங். ($^1/_6$ கழுத்தளவு $+\frac{1}{2}$ அங்)

4-ல் இருந்து 0 வரை $6\frac{1}{2}$,, (பாதி தோள் $+\frac{1}{4}$ அங்)

5-ல் இருந்து 4 வரை $\frac{1}{2}$,,

6-ல் இருந்து 4 க்கு நேர்க்கோடு இணைக்கவும்)

7-ல் இருந்து 2 வரை $9\frac{1}{2}$ அங். ($\frac{1}{4}$ மார்பளவு $+1$ அங். 2, 7-க்கும் குறுக்குக்கோடு இணைக்கவும்)

8-ல் இருந்து 10 வரை $9\frac{1}{2}$,,

9-ல் இருந்து 1 வரை $9\frac{1}{2}$,,

10-ல் இருந்து 0 வரை $14\frac{1}{4}$ அங்.
(இடுப்புவரை முதுகுநீளம் $+\frac{1}{4}$ அங்.)
11-ல் இருந்து 0 வரை $\frac{3}{4}$,,
12-ல் இருந்து 3 வரை $2\frac{1}{4}$,,
($^1/_6$ கழுத்தளவு)
13-ல் இருந்து 0 வரை $2\frac{1}{4}$,,
($^1/_6$ கழுத்தளவு)
14-ல் இருந்து 1 வரை $\frac{1}{2}$ அங்.
15-ல் இருந்து 6 வரை $1\frac{1}{2}$,,
16-ல் இருந்து 15 வரை $\frac{3}{4}$,,
17-ல் இருந்து 8 வரை $\frac{1}{2}$,,
18-ல் இருந்து 13 வரை 3 ,,
19-ல் இருந்து 18 வரை $1\frac{1}{2}$,,
20-ல் இருந்து 19 வரை 1 ,,

18, 20, 13 உண்கள் வரை புள்ளிவைத்த கோட்டின்மீது, சதுரவெட்டு (டைமன்கட்) வெட்டி எடுத்துவிடவும்.

14, 11, 3, 5, 16, 7, 17, 9, 14 எண்கள் வரை பின்பக்கம் இணைப்பவைகள்.

A, 13, 3, 5, 15, 7, 17, 9, A எண்கள் முன்பக்கம் இணைப்பவைகள்.

14, 9 எண்வரை பின்பக்கம் கோட்டின்மீது $\frac{1}{2}$ அங்குலம் வெட்டி எடுத்துவிடவும். (சாய்வாக)

10, 17 எண்களுக்கு மத்தியில் $\frac{3}{4}$ அங். அகலம். 7 அங் நீளம். முன்பக்கம் 2 டக்குகளும் பின் பக்கம் 2 டக்குகளும் அமைக்கவும்.

A, 13 எண்கள் வரை முன்பக்கம் திறப்பு (ஓப்பன்) அமைக்கவும்.

காலர் :

1-ல் இருந்து 0 வரை 3 அங்.
2-ல் இருந்து 0 வரை $7\frac{3}{4}$ அங்
(பாதி கழுத்து $+1$ அங்)
3-ல் இருந்து 2 வரை 3 ,,
4-ல் இருந்து 3 வரை $1\frac{1}{2}$,,
5-ல் இருந்து 4 வரை $\frac{1}{2}$,,
6-ல் இருந்து 3 வரை 4 ,,
(5-ல் இருந்து 6-க்கு இணைக்கவும்)

1, 6, 5, 2, 0, 1 எண்கள் காலர் இணைப்புகள்

முழுநீள கை :

1-ல் இருந்து 0 வரை 24 அங்.
(கை நீளம் $+2$ அங். தோள்பக்கம் மடிப்புக்காக)
2-ல் இருந்து 0 வரை $6\frac{1}{2}$ அங்.
($^1/_8$ மார்பளவு $+2$ அங்)
3-ல் இருந்து 2 வரை $7\frac{1}{2}$,,



($\frac{1}{4}$ மார்பளவில் 1 அங் குறைவு)
4-ல் இருந்து 1 வரை $7\frac{1}{2}$ அங்.
(1, 2, 3, 4 எண்களை இணைக்கவும்)
5-ல் இருந்து 4 வரை 2 அங்.
6-ல் இருந்து 0 வரை $2\frac{1}{2}$,,
7-ல் இருந்து 6 வரை $3\frac{1}{2}$,,
8-ல் இருந்து 7 வரை $\frac{1}{2}$,,
9-ல் இருந்து 6 வரை 1 ,,
(3, 8, 9, 0 எண்கள் பின்பக்கம் கை வளைவு இணைக்கவும்.)
10-ல் இருந்து 8 வரை $\frac{3}{4}$ அங்.

3, 10, 9, 0 வரை புள்ளிகள் வைத்துள்ள கோட்டின்மீது முன்பக்கம் கை (கவர்தட்டு) வெட்டி எடுத்துவிடவும்.

கையின் விளக்கம் :

A, B, உள்ள இடத்தில் 5 அங். திறப்பு (ஓப்பன்) அமைக்கவும்.

B, 1 வரை உள்ள இடத்தில் இரண்டு டக் அமைத்து $7\frac{1}{2}$ அங். கப் லூஸ் தைக்கவும். பட்டன் $6\frac{1}{2}$ அங். கட்டவும்.

கப் அகலம் 2 அங்குலத்தில் தேவையான ஷேப்பில் பால்சன் (உள்பக்கம் திருப்பவும்) செய்யவும். கப், கையுடன் சேர்த்து வரையப்பட்டுள்ளது.

இங்கு விளக்கப்பட்டுள்ள படத்தில் இருவிதமாக வெட்டலாம். காலர் உள்ள ப்ளவுஸ். வேண்டுமானால் 13, 3 எண்கள் வரை சதுர (ரவுண்டு) கழுத்து வெட்டி காலர் பொருத்தவும். சதுரவெட்டு (டைமன்கட்) வேண்டுமானால் 18, 20, 13 எண்கள் வரை முன்பக்கம் திறப்பு (டைமன்கட்) வெட்டி எடுத்துவிடவும். கழுத்து தைத்த பிறகு, முடிப்பு கயறு (லேஸ்) 13 எண் உள்ள இடத்தில் அமைக்கவும். காலர் உள்ள ப்ளவுசுக்கு 2 அங்குலம் துண்டு உள்பக்கம் திருப்பி (பால்சன்) பட்டி அமைக்கவும்.

தைப்பதற்கு $\frac{1}{4}$ அங்குலம் வைத்து படம் வரையப்பட்டு உள்ளது. விளக்கப்படத்தின் வடிவம்போல அமைத்திருக்கிறதா என்று ஒத்திட்டுப் பார்த்து பிறகு வெட்டி தைக்க வேண்டும்.

இந்திய சமஸ்தானங்கள்

இந்திய துணைக்கண்டத்தில், பிரிட்டிஷ் ஆதிபத்தியத்தின்போது பலவகைப்பட்ட சமஸ்தானங்கள் சிறிதும், பெரிதுமாகச் சிதறிக்கிடந்தன. அந்த சமஸ்தானங்கள் இந்திய வரலாற்றில் வெவ்வேறு காலத்தில் தோன்றியவைகளாயிருந்தன. சில வெளிநாட்டார் படையெடுப்புக்கு முன்பே—அதாவது கஜினி, கில்ஜி, மொகலாயர், பிரிட்டிஷ் போன்றோர் வருவதற்கு முன்பே இந்த துணைக்கண்டத்திலேயே ஆங்காங்கு இருந்த சிறிதும் பெரிதுமான அரசுகளாகும். மொகலாயர் ஆட்சியின்போது, பல ஜாகிர்கள் ஏற்படுத்தப்பட்டு, நாளடைவில் அவை சிறு சுயேச்சை அரசுகளாக ஆயின. பின் பிரிட்டிஷ் ஆதிபத்தியம் தமக்கு உதவியாகயிருந்தவர்களைக் கொண்டு அனுமதித்த சில சமஸ்தானங்கள் உருப்பெற்றன. பிரிட்டிஷ் ஆதிபத்தியத்தின் போது, சுதேச சமஸ்தானங்கள் எதேச்சாதிகாரப் போக்கில் ஆளப்பட்டுவந்தன.

மைசூர்போன்று ஒரிரு சமஸ்தானங்களைத் தவிர மற்றவையெல்லாம் பிரிட்டிஷ் மாகாணங்களைவிட எல்லா வகையிலும் பிற்போக்கடைந்தனவாக இருந்தன. வறுமைப் பிடியில் நாட்டு மக்கள் வாடிக்கொண்டிருக்கும்பொழுது, அந்தக் குறுநில மன்னர்கள் மட்டும் தமது கோலாகல வாழ்வை மட்டுப்படுத்திக் கொண்டதில்லை. அவர்கள் குதிரைப் பந்தயத்திலும், உல்லாசப் பயணங்களிலும், விருந்து வேடிக்கைகளிலும் மக்களின் வரிப்பணத்தைப் பாழாக்கிவந்தனர். பஞ்சத்திலும் பிணியிலும் குடிமக்கள் மாண்டு கொண்டிருக்கும் பொழுது, கோமகனோ குமரிகள் புடைசூழ ஆடல், பாடல்களில் ஈடுபட்டிருந்தான். அரண்மனை உல்லாசபுரியானது, அந்தப்புரம் அழகிகளை அடைத்துவைக்கும் மாரனின் சிறைச்சாலையானது. காவலன் களித்துக்கிடந்தான்; மக்கள் தேம்பித் தவித்தனர். ஒவ்வொரு சமஸ்தானாதிபதியும் ஒரு லூயி அரசனைப்போல, ஒரு பரூக் மன்னனைப்போல, வாழ்ந்தனர்.

சமஸ்தானங்களை ஒழித்துக்கட்ட வேண்டுமென்று காங்கிரஸ் தலைவர்கள் கூறினார்கள், ஆனால் பதவியேற்றபின் அந்த வீரப்பேச்சுகள் எங்கனமோ மங்கிவிட்டன.

காஷ்மீர் சமஸ்தானத்துக்குள் பண்டித நேரு நுழைய முயன்றபோது, துப்பாக்கிகொண்டு அவரைத் தடுத்து நின்றனர். ஆனால் அதே காஷ்மீர அரசரைக் காப்பாற்றுவதில் நேரு பண்டிதர் இன்று கண்ணுங்கருத்துமாயிருக்கிறார். அன்று காஷ்மீரில் திவானாயிருந்து கொடுமைப்படுத்திய கோபால்சாமி ஐயங்காருக்கு காங்கிரஸ் ஆட்சி கிடைத்ததும் மத்திய அரசாங்கத்து மந்திரிபதவி கிடைத்தது.

அன்று திருவாங்கூரில் எதேச்சாதிகாரப் போக்கில் காங்கிரசையும், மற்ற விடுதலையியக்கத்தினரையும் அடக்க முயன்ற சர். சி. பி. இராமசாமி ஐயர் இன்று பண்டித நேருவால் கைகுலுக்கி வரவேற்று, அளவளாவவேண்டிய கண்ணியவானாகிவிட்டார்.

மாபெரும் மாறுதலைச் செய்யவேண்டுமெனக் கூறியவர்கள், இன்று மாறிவிட்டனர், அவர்கள்பக்கம்.

இந்திய அரசியல் சட்டத்தின்படி, பல சுதேச சமஸ்தானங்களுக்குப் பாதுகாப்பளிக்கப்பட்டிருக்கின்றன. ஆட்சிமுறையின் தலைவர்களாக அவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றனர்.

இந்திய மண்ணில் முழு விடுதலை வேண்டுமென்று கூறியவர்களால், இன்று எப்படி காஷ்மீர் மன்னர்களையும், கத்தியவார் ராஜாக்களையும் ஏற்றுக்கொள்ள முடிகிறதோ தெரியவில்லை.

இந்திய சமஸ்தானாதிபதிகளுக்கு மத்திய அரசாங்கம் ஆண்டு செலுத்தப்படும் காணிக்கைகளுக்கு மட்டும் குறைவில்லாமல் இருக்கிறது. சமஸ்தானாதிபதிகளுக்குச் சொந்தப் பொருள்கள், நிலங்கள், சொத்துக்கள், அரண்

மனைகள் முதலியவை அளிக்கப்பட்டு, காப்பாற்றப்படுவதுடன், அவற்றில் கிடைக்கும் வருமானத்துடன், சொந்த செலவிற்காக மத்திய அரசாங்கம் 20 லட்சம், 30 லட்சம் என வாரி வழங்குகிறது. ஐதராபாத் மன்னருக்கு ஐம்பது லட்சம் ரூபாய் ஆண்டொன்றுக்கு. பரோடா மன்னருக்கு 26 லட்சம் ரூபாய், குவாலியர் மன்னருக்கு 25 லட்சம். நீண்ட கணக்கு, பெருந்தொகை.

இந்திய அரசாங்கம் ஆண்டொன்றுக்கு 283 அரசர்களுக்கு, தான் செய்துகொண்ட உடன்படிக்கைகளின்படி "கப்பம்" செலுத்துகிறது. செலுத்தப்படும் மொத்தத்தொகை 5 கோடி 75 லட்சம் ரூபாய்களாகும். மறந்துவிடவேண்டாம். ஒவ்வொரு ஆண்டும் இந்தத் தொகை செலுத்தப்படுகிறது. இந்திய அரசியல் சட்டத்தின்படி இதற்கு நிதி ஒதுக்கப்படுகிறது.

மத்திய அரசாங்கம்—டில்லி ஆதிபத்தியம் 5¾ கோடிக்குமேல் காணிக்கை செலுத்துகிறது என்று கூறும்பொழுது, அந்தப் பணம் மக்களிடமிருந்து வாங்கப்படும் வரிப்பணத்திலிருந்து செலுத்தப்படுகிறது என்பதைக் கவனப்படுத்திக்கொள்ள வேண்டும். ஏழைகளின் இரத்தத்தைக் கசக்கி, தொழிலாளியின் வியர்வையைப் பிழிந்து, கோடிக்கணக்கான மக்களின் கண்ணீரை வடித்து, சேர்க்கப்பட்ட வரிப்பணம்—மாகாணங்கள் கல்விக்கும் மருத்துவ வசதிக்கும் பணமில்லையென்று தவிக்கும் போதும், மத்திய அரசாங்கத்துக்கு மட்டும் நாம் கொட்டியளக்கும் கோடிக்கணக்கான வரிப்பணம்—பஞ்சமும் பிணியும் மூண்டால், புயலடித்துவிட்டால், மழை பெய்யாது போய்விட்டால், அதைச் சமாளிக்க வக்கு வகையின்றி மத்திய அரசாங்கத்திடம் மடியேந்தி பிச்சை கேட்கும் நிலைக்கு, மத்திய அரசாங்கம் எடுத்துச்செல்லும் வரிப்பணம்—டில்லி ஆதிபத்தியத்தால் செலவிடப்படுகிறது.

டில்லி ஆதிபத்தியம் நம்மிடம் வசூலிக்கும் பணம்—காஷ்மீர ராஜகுமாரனுக்கு ஒரு சம்பளமாக, ஜெய்ப்பூர் ராஜாவிற்கு பந்தயக்குதிரையாக போகிறது.

புயலடித்தால், வெள்ளம் வந்தால், இடிந்துபோன குடிசைகளை நிமிர்த்த, நொடித்துப்போன குடும்பங்களைக் காப்பாற்ற மத்திய அரசாங்கத்தால் உதவ முடிவதில்லை. ஆனால் சமஸ்தானாதிபதிகளின் போகபோக்கியங்களுக்கு மட்டும் ஐந்தே முக்கால்கோடி பணம் ஒதுக்கப்படுகிறது.

நாம் செலுத்தும் வரிப்பணம் நமது துன்பங்களைத் தீர்க்க உதவுவதில்லை. மக்களோ புழுப்போலத் துடிக்கின்றனர், செலுத்தும் வரிப்பணமோ மகாராஜாக்கள் கொலுமண்டபங்களில் சதிராடிக்கொண்டிருக்கிறது. நம்மிடமிருந்து பிரித்தெடுக்கும் வரிப்பணத்தை, மகாராஜாவின் கொலுமண்டபத்துக்கு அழைத்துச் செல்லும் 'தூதுவனாக' மத்திய அரசாங்கம்—டில்லி ஆதிபத்தியம் விளங்குகிறது.

டில்லி ஆதிபத்தியம் ஆண்டுதோறும் செலுத்தும் "காணிக்கைகள்"—மகாராஜாக்களுக்கும், ராஜாக்களுக்கும் ஒதுக்கும் பணம் ஐந்தே முக்கால் கோடி என்று சொன்னோம். அதன் முழு விபரம்—ஒவ்வொரு அரசாங்கத்தின்படி கீழே தரப்படுகிறது.

ராஜஸ்தான் :

		ஆண்டொன்றுக்கு
ஜெய்பூர்	ரூ.	18.00.000
ஜோதிபுரி	,,	17,50,000
பிகனிர்	,,	17,00,000
மேவார்	,,	10,00,000
கோட்டா	,,	7,00 000
ஆள்வார்	,,	5.20,000
பாரத்பூர்	,,	5.02,000
புண்டி	,,	2.81,000
டான்க்	,,	2,78,000
தால்பூர்	,,	2,64,000
சிரோகி	,,	2,12.600
தங்காபூர்	,,	1,98.000
ஜெய்சால்மர்	,,	1.80,000
ஜல்வார்	,,	1,36.000
கிஷன்கார்	,,	1,36.000
பான்ஸ்வாரா	,,	1,26,000
கரௌலி	,,	1.05,000
பர்தாப்கா	,,	1,02,000
ஒருலட்சத்திற்குட் பட்ட தொகை பெறும் 4 சமஸ்தானங்களின் மொத்தம்	ரூ.	2,52,225

பம்பாய் :

பரோடா	ரூ	26,50,000
கோலாப்பூர்	,,	10,00,000
ராஜபிப்லா	,,	3,97,946
ஐதர்	,,	3,28,000

பலன்பூர்	,,	2,75,000
சங்லி	,,	2,62,639
பரியா	,,	2,25,000
சோட்டா உதயப்பூர்	,,	2,12,000
பன்ஸ்தா	,,	1,60,000
தாராபூர்	,,	1,50,000
பால்டன்	,,	1,40,442
காம்பே	,,	1,38,000
ஜஞ்ஜிரா	,,	1,33,500
லுணவாடா	,,	1,31,000
ராதான்பூர்	,,	1,29,000
ஜாவார்	,,	1,24,000
சான்ட்	,,	1,12,000
சாவன்ட்வடி	,,	1,07,500
ஒருலட்சத்திற்குட்பட்ட தொகை பெறும் 48 சமஸ்தானங்களின் மொத்தம்	ரூ.	16,07,094

சௌராஷ்டிரா :

பவநகர்	ரூ.	10,00,000
நவநகர்	,,	10,00,000
கொண்டால்	,,	8,00,000
மார்வி	,,	8,00,000
போர்பந்தர்	,,	3,80,000
தராங்கதரா	,,	3,80,000
ராஜ்காட்	,,	2,85,000
லிம்பிடி	,,	2,30,000
வான்கனர்	,,	1,80,000
பலிட்டணு	,,	1,80,000
ஜஸ்தன்	,,	1,50,000
வாத்வான்	,,	1,42,000
ஜெத்பூர்	,,	1,21,536
திரால்	,,	1,10,000
அமநகர் தாணு தெவ்லி	,,	1,00,000
பில்கா	,,	1,00,000
ஒரு லட்சத்திற்குட்பட்ட தொகை பெறும் 21 சமஸ்தானங்களின் மொத்தம்	ரூ.	9,67,907

மத்தியபாரத் :

குவாலியர்	,,	25,00,000
இந்தூர்	,,	15,00,000
தார்	,,	2,90,000
தேவாஸ் (சிறியது)	,,	1,80,000
ரட்லம்	,,	1,50,000
தேவாஸ் (பெரியது)	,,	1,45,000
பர்வாணி	,,	1,45,000
ராஜ்கார்	ரூ.	1,40,000
ஜாப்வா	,,	1,27,000
நரசிங்கார்	,,	1,15,000
ஒருலட்சத்திற்குட்பட்ட தொகை பெறும் 14 சமஸ்தானங்களின் மொத்தம்	ரூ.	6,75,750

பெப்சு :

பாட்டியாலா	ரூ.	17,00,000
நாபா	,,	4,10,000
பரிட்காட்	,,	3,81,000
ஜிந்து	,,	3,28,100
கபூர்தலா	,,	2,70,000
மலேர்கோட்லா	,,	1,10,000
ஒரு லட்சத்திற்கு குறைந்த தொகை பெறும் 2 சமஸ்தானங்களின் மொத்தம்	ரூ.	1,25,000

திருவாங்கூர் — கொச்சி :

திருவாங்கூர்	ரூ.	18,00,000
கொச்சி	,,	2,35,000

ஓரிசா :

மயூர்பாஞ்ச்	ரூ.	3,27,400
பாட்ணு	,,	2,49,600
காங்பூர்	,,	1,35,100
காலகண்டி	,,	1,14,000
கியோஞ்சார்	,,	1,11,500
ஒருலட்சத்திற்குட்பட்ட தொகை பெறும் 20 சமஸ்தானங்களின் மொத்தம்	ரூ.	8,74,500

மத்தியப் பிரதேசம் :

நண்ட்யோன்	ரூ.	3,53,650
கொரியா	,,	2,78,700
பாஸ்டர்	,,	2,10,100
ரைகார்	,,	1,72,600
சர்குஜா	,,	1,45,300
ஒரு லட்சத்திற்குட்பட்ட தொகை பெறும் 9 சமஸ்தானங்களின் மொத்தம்	ரூ.	4,04,000

உத்திரப்பிரதேசம் :

ராம்பூர்	ரூ.	7,00,000
டெஹ்ரிகார்வல்	,,	3,00,000
காசி	,,	3,00,000

சென்னை :

புதுக்கோட்டை	ரூ.	2,66,500
சாந்தூர்	,,	90,000
பங்கனப்பள்ளி	,,	53,900

மேற்கு வங்காளம் :

கோச் பிஹார்	,,	3,50,000

பஞ்சாப் :

மூன்று சமஸ்தானங்கள் பெறும் தொகை மொத்தம்	ரூ.	1,32,000

பீகார் :

இரண்டு சமஸ்தானங்கள் பெறும் தொகை மொத்தம்	ரூ,	1,21,900

நேராட்சிக்குட்பட்ட சமஸ்தானங்கள்

விந்தியப்பிரதேசம் :

ரேவா	ரூ.	10,00,000
ஆர்ச்சா	,,	1,85,000
டாட்டியா	,,	1,54,300
பானு	,,	1,47,300
சாட்டர்பூர்	,,	1,00,350
ஒரு லட்சத்திற்குட்பட்ட தொகை பெறும் 30 சமஸ்தானங்களின் மொத்தம்	ரூ.	6,88,250

ஹிமாச்சல் பிரதேசம் :

மண்டி	ரூ.	2,20,000
காம்பா	,,	1,38,000
சிர்முர்	,,	1,35,000
ஜப்பல்	,,	1,01,000
ஒரு லட்சத்திற்குட்பட்ட தொகை பெறும் 26 சமஸ்தானங்களின் மொத்தம்	ரூ.	4,70,960
போபால்	,,	11,00,000
கட்ஜு	,,	8,00,000
திரிபுரா	,,	3,30,000
மணிபுரி	,,	3,00,000
பிலியஸ்பூர்	,,	70,000

தனிப்பட்ட சமஸ்தானங்கள்

ஹைதராபாத்	ரூ.	50,00,000
மைசூர்	,,	26,00,000
ஜம்மு—காஷ்மீர்	,,	15,00,000

ஆக மொத்தம் ரூ. 5,75,10,149

ஆண்டொன்றுக்கு ஐந்துகோடி எழுபத்தைந்து லட்சம்; அள்ளி வழங்கப்படுகிறது அரசகுடும்பத்தினருக்கு. அதுவும் முடிமன்னர்களை அடியோடு ஒழித்துக்கட்டவேண்டுமென முழங்கிய நேரு பண்டிதர் ஆட்சியில்!

“எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்” என்ற கீதம் இசைக்கப்படுகிறது. ஆனால் பட்ஜெட் திட்டும்பொழுது, பணம் ஒதுக்கப்படும் பொழுது, “இந்நாட்டு மன்னர்கள்” கவனத்துக்கு வருவதில்லை. கோட்டை மன்னர்கள் தான் கவனிக்கப்படுகின்றனர்.

சமஸ்தானங்களை இந்தியப் படத்திலிருந்து அப்படியே அகற்றிவிட்டு, அவைகளையும் மற்ற பகுதிகளுடன் இணைத்துவிடவேண்டுமென்று காங்கிரஸ் கூறியது மட்டுமல்ல, சமஸ்தான மக்களை விடுவிக்கும் வேலையைக் கவனிக்க, இந்திய சமஸ்தான காங்கிரஸ் சபை என்று காங்கிரஸ் சபைக்குள் ஒரு பகுதி நியமிக்கப்பட்டது. ஆனால் சுதந்தர இந்தியாவில் காங்கிரஸ் பதவியேற்றதும், அந்தப் பேச்சுகள் மறக்கடிக்கப்பட்டன, வேலைத்திட்டங்கள் கைவிடப்பட்டன. அரசியல் அமைப்புத் திட்டத்திலேயே, மன்னர்கள் பரம்பரைக்கும், அவர்தம் பட்டம், பதவி, வருவாய் முதலியவற்றுக்கும் உறுதிமொழி அளிக்கப்பட்டிருக்கிறது.

வயலில் வாடும் உழவனும், ஆலையில் அல்லற்படும் தொழிலாளியும் கோடிக்கணக்கில் இருக்கும்பொழுது, அவர்களுடைய குறை தீர்க்காமல், காஷ்மீர ராஜகுமாரனுடன் நேரு பண்டிதர் உல்லாச ஓடத்தில் பவனி வருகிறார்; கத்தியவார் மன்னர்களுடன் விருந்துண்ணுகிறார். ஐதராபாத் மன்னருடன் அளவளாவுகிறார், ஜாம்நகர் மகாராஜாவை யோசனை கேட்டுக்கொள்ளுகிறார்.

அரசர்கள் சமூகத்திற்கு ஐந்தேமுக்கால் கோடி ரூபாய்க்குமேல் காணிக்கை கொட்டியளக்கப்படுகிறது, ஆண்டொன்றுக்கு. காங்கிரஸ் ஆட்சியில்—டில்லி ஆதிபத்தியத்தில் மக்களின் வரிப்பணம் பாழாகும் விதத்தில் இதுவும் ஒன்று.

வந்துவிடுவார் — வருந்தாதே!

அவனோ இளைஞன். அவளோ இளமை நலங் குன்றா எழிலரசி. இருவருங் கருத்து ஒருமித்துக் காதல் மணம் பூண்டு இல்லற வாழ்க்கையில் இறுமாந்திருக்கின்றனர்.

கண்ணுக்கினிய காட்சிகளைக் காணுதலும், செவிக்கினிய இசைகளைக் கேட்டலும், தென்றல் காற்றுப்பட உலாவுதலும், நறுமண மலர் சூடி நன்மணப் புகையில் மூழ்குதலும், அறுசுவை உண்டி உண்டு மகிழ்தலும், ஆடிப்பாடிக் கூடிக்குலாவுதலும் ஆன இன்பச் செயல்களில் ஈடுபட்டிருக்கின்றனர். நாட்கள் உருண்டோடிக்கொண்டிருக்கின்றன. நாளாக நாளாக அவர்களது காதல், கனிந்து கனிந்து இன்பச் சுவையைப் பெருக்கியவண்ண மிருக்கின்றது. சந்தனம் அரைக்க அரைக்க மணங்கமழ்வதைப் போல, அவர்களது காதல் பழகப்பழக இன்பம் தருகிறது. கவலையற்ற வாழ்வில் காலந்தள்ளி வருகின்றனர்.

இன்பக் களியாட்டத்தில் அவன் ஈடுபட்டிருந்த காலத்தில், வரவைப்பற்றிக் கவலைப்படாமல், செலவு செய்வதிலேயே ஈடுபட்டிருந்ததால், அவன் செல்வம் சிறிது சிறிதாகத் தேய்ந்து குறைந்துபோகிறது. செல்வங் குறைந்துபோதல், அவன் தீயவழிகளில் செலவழித்தான் என்பதாலல்ல ; முறைப்படி செய்த செலவே அவனை அந்த நிலைக்குக் கொண்டு வந்துவிடுகிறது.

பொதுப்பணியில் ஈடுபட்டு பொதுமக்களுக்கு அரிய நன்மைகள் பலவற்றைப் புரிந்து வரும் அருளுடையோர், தன்னிடத்து வரும் போதெல்லாம், அவர்களுக்கு ஏதேனும் கொடுக்கவேண்டும் என்ற அற உள்ளம் படைத்தவன் அத்தலைவன். அந்தக் கடமையினின்றும் வழுவ அவனால் இயலுவதில்லை. காதல் வாழ்க்கையை இன்பகரமாக நடத்த பொருட்செலவு ஏற்பட்டே தீருகிறது. செல்வங் குறைந்தவழி மன அமைதி எங்கே ? காதல் வாழ்வு எங்கே ? எனவே தன் வாழ்க்கையையும், தன்னை அண்டும் அருளுடையோர் வாழ்க்கையையும் இனிதாக வருங்காலத்தில் ஈடேற்றவேண்டி, பொருள் தேடும் முயற்சியில் இறங்க முயலுகிறான் அக் காதலன்.

பொருள் தேடுவதற்கு வெளியூர் செல்ல வேண்டி ஏற்படுமே என்று எண்ணிடும்போதே, தன் அருமைக் காதலியை விட்டுப் பிரிந்து செல்லவேண்டி வருமே, இவ்வளவு நாட்கள் நுகர்ந்துவந்த இன்ப நிகழ்ச்சிகள், இனிக் கனவாக மாறிவிடுமே என்று மனங்கலங்குகிறான். ஆனால் பிறர் பழிக்காத வகையில் இல்லறத்தை நடத்திச் செல்லவேண்டுமாயின், பொருள் தேடியாகவேண்டிய கடமை உணர்ச்சியை உணர்கிறான். மனதை ஒருவாறு தேற்றிக் கொள்ளுகிறான்.

தான் பொருள் தேடுவதற்காக வெளியூர் செல்ல இருக்கும் கருத்தை, அவன், மெல்ல தன் காதலியிடம் கூறுகிறான். அவள் இது வரையில் அவனிடம் கேட்டறியாத மொழியைக் கேட்டுத் திடுக்கிட்டதோடு, இதுவரையில் தாங்கியறியாத பிரிவுநிலையை இனித் தாங்க வேண்டி வருமே என்று எண்ணி மனங்கலங்குகிறாள். தான் பொருள் தேடப்போவதே, தம்முடைய காதல் வாழ்வு இன்னும் சிறப்பாகவும், மேம்பாடாகவும், இனிதாகவும், இன்பமாகவும் நடந்தேற வேண்டும் என்பதற்காகத்தான் என்பதை அவன் பலமுறை அவளிடம் வற்புறுத்திக் கூறுகிறான். தோழியை விட்டும் அவளிடம் சொல்லச் சொல்கிறான். இறுதியில் ஒருவாறாக அரைமனதோடு அவள் இசைவு தருகிறாள்.

“எப்படிப் பொருள் தேடுவீர்கள் ?” என்று தலைவி தலைவனைக் கேட்கிறாள்.

"நமது நாட்டுப் போர்ப்படை, மாற்றரசன் நாட்டின்மீது போர்தொடுக்கக் கிளம்பியுள்ளது. நான் அப்படையோடு சென்று, மாற்ருனை முறியடித்து, வென்று, பொருள்பல பரிசாகக் கொண்டுவருவேன்" என்று கூறுகிறுன்.

தன் காதல் மொழியாளுக்கு ஒருவாறு தேறுதல் மொழி கூறியபிறகு தலைவன் வெளியூருக்குப் புறப்பட்டுச் செல்கிறுன்.

காதிலே குழையணிந்து, கழுத்திலும், கைகளிலும் அணிமணி பூண்டு அழகோடு காட்சியளித்துவந்த அந்த நல்லாள், கணவனது பிரிவை எண்ணி எண்ணி மனம் ஏங்குகிறுள்; கண் கலங்குகிறுள்; அவள் அழகு கெடுகிறது; உடற்பொலிவெல்லாம் அழிகிறது. தோழி அவளுக்கு எவ்வளவோ ஆறுதல்மொழி கூறிப் பார்க்கிறுள்; அவள் வருத்தத்தை நீக்கிக் கொள்ளவில்லை. இறுதியில் தலைவின் மனகூற்குப்பிடித்தமான ஆறுதல்மொழி கூறிஞல்தான் அவள் மனந்தேறுவாள் என்ற முடிவுக்குத் தோழி வருகிறுள்.

"ஏடி! நான் சொல்வதைக் கொஞ்சம் கேள். பொருள் தேடும்பொருட்டு உன்னிடத்தில் பிரிவு சொல்லிக்கொண்டுபோன, உன் காதலர், இதோ விரைவில் வந்துவிடப் போகிறுர், பார்!" என்று தோழி சொல்லுகிறுள்.

அதுகேட்ட தலைவி சற்றுச் சலிப்புடன், "அவர் ஏண்டி வரப்போகிறுர்? அவருக்கு என்னிடத்தில் உண்மையான அன்பு, இரக்கம் இருந்தால், என்னை விட்டுவிட்டுப் போவாரா? அவர் ஒருநாளும் வரமாட்டார்!" என்று கூறுகிறுள்.

"அவர் கட்டாயம் வருவார், பாரேன்!"

"அவர் வரமாட்டார்! வரமாட்டார்!!"

"அவர் செல்லும்போது என்ன சொல்லிவிட்டுச் சென்றுர்; அது உனக்கு நினைவில்லையா?"

"என்ன சொல்லிவிட்டுச் சென்றுரடி?"

"அவர் போகும் வழியிலுள்ள காடு எப்படிப்பட்டதாக இருக்கும் என்று அவர் விவரித்துச் சொல்லவில்லையா?"

"ஆமாம்! அதற்கென்ன இப்போது!"

"அவர் போகும் காடுகள் வெய்யலின் வெம்மையால் நெருப்பாக மாறி, அடிவைத்தாள், பொறுத்துக் கொள்ளமுடியாத அளவுக்குக் கடினமானதாக இருக்கும்; குடிக்க தண்ணீர் இல்லாமல், தந்தை யானையும் தாய் யானையும் தம் குட்டியோடு அலைந்து திரியும், பிறகு சிறிதளவு தண்ணீர் தேங்கிக் கிடக்கும் குட்டைக்கு வந்து சேரும்; தாயும் தந்தையும் உண்ண வேண்டிய தண்ணீராயிற்றே என்பதை எண்ணிப் பார்க்காமல், குட்டி முதலிலே இறங்கிக் கால்களை விட்டு அந்தத் தண்ணீரைக் கலக்கிவிடும்; தண்ணீர் மிகக் கொஞ்சமாக இருக்கும் காரணத்தால், தந்தையானை தாய் யானையை முதலில் குடிக்கச் செய்து, பிறகு தண்ணீர் மீதப்படுமேயாஞல் அந்தத் தண்ணீரைத் தான் உண்ணும் இப்படிப்பட்ட காட்சி அங்கு நடைபெறும் என்று அவர் சொல்லவில்லையா?"

"சொன்னுர்! அதற்கும். அவர் விரைவில் வருவதற்கும் என்னடி தொடர்பு?" என்று சற்றுச் சினத்துடன் கேட்கிறுள் தலைவி.

அதற்குத் தோழி, "அதுமட்டுமல்லாமல், அவர் இன்னும் என்ன சொன்னுர்: வெய்யலின் கொடுமை, காடுகளிலேயுள்ள பசிய இலைகளையெல்லாம் தீய்த்து, தீய்ந்த கொம்புகளோடு மரங்களை விட்டுப் போவோரைத் துன்பத்திலாழ்த்தும்; அதுவும் இன்பத்தை விட்டு நீங்கிச் செல்பவருக்கு மிக்கத் துன்பந் தருவதாக இருக்கும் அந்தக் காடுகள்; அந்தக் காடுகளிலே வாழும் பெண்புறுக்கள், வெம்மை தாங்கமாட்டாமல், இளைத்து, வருந்தி, வாழும்போது அந்நிலையைக் காண மனங்கொள்ளாமல், ஆண் புறுக்கள், அந்தப் பெண் புறுக்களைத் தம் சிறகுகளின் நிழலிலே அணைத்து, அவ்வெம்மையைத் தீர்க்கும். இப்படிச் சொல்லவில்லையா?" என்று மேலும் வினவுகிறுள்.

"சொன்னுரடி, சொன்னுர்! நான் கேட்டதற்குப் பதில் சொல்லாமல், ஏன் உளறிக் கொண்டே போகிறுய்?"

"அதுமட்டுமா? அந்தக் காடுகளில், ஞாயிற்றின் திரண்ட கதிர்கள் எரிப்பதாலே மலைமேல் நிற்கும் மூங்கிலெல்லாம் கூட வாடிவிடும்; அங்கு போவோர், சென்று சேரமுடியாத அளவுக்கு, அந்தக் காடுகள் சுடும் தன்மையுடையனவாக இருக்கும்; அந்தக் காடுகளிலே வாழும் பெண்மான், வெப்பந் தாங்கமாட்டாமல்

வருந்த, அதன் வருத்தத்தைப் போக்க ஆண்மான் துடிக்கும்; ஆண்மான், வெய்யலைத் தாங்கித் தான் நின்று, பெண்மானுக்குத் தன் நிழலைக் கொடுத்து, அது சாகாதவாறு உயிர் அளிக்கும். இந்தக் காட்சியையும் அங்கே காணலாம் என்று அவர் சொன்னாரல்லவா?"

"இதுவுஞ் சொன்னார்; இன்னமும் என்னமோவெல்லாஞ் சொன்னார்! இதற்கும், அவர் வந்துவிடுவார் என்பதற்கும் என்னடி தொடர்பு என்று கேட்டேன், அதற்குப் பதில் சொல்லாமல், பைத்தியக்காரிபோல பேசிக் கொண்டே போகிறாயே!"

"தொடர்பு இருக்கிறதடீ, இருக்கிறது! உன் காதலர் உன்னிடம் மிக்க அன்புடையவரல்லவா?"

"ஆமாம்! அன்று அன்புடையவராக இருந்தார்; இன்று அப்படிச் சொல்வதற்கில்லையே! இப்பொழுது என்னை அவர் மறந்துவிட்டார். என்னை மறக்காமல் அவர் இருக்கிறார் என்றால், என்னை விட்டுவிட்டுப்போக அவருக்கு மனந் துணியுமா?"

"அவர் உன்னை மறக்கமாட்டார்; திரும்பி வந்துவிடுவார் என்பதற்காகத்தான், இவற்றையெல்லாம் சுட்டிக்காட்டினேன். அவர் நம்மிடத்தில் கூறிச்சென்றபடி, போகும் வழியிலுள்ள காட்டில், யானை, புறு, மான் ஆகியவைகள் தங்கள் காதலியர்களிடம் எப்படி நடந்துகொள்கின்றன என்ற காட்சிகளையெல்லாம் காணுவார். உடனே அவருக்கு உன்னைப்பற்றிய நினைவு, உன்னை எப்படித் தவிக்கவிட்டுவிட்டு வந்துவிட்டோம் என்ற தன்மையும் உள்ளத்தில் தோன்றும். தங்கள் காதலியர்களிடம் சாதாரண விலங்குகள் காட்டும் இரக்கவுணர்ச்சியைத், தம் காதலியிடம் காட்டத் தாம் தவறிவிட்டோமே என்று வெட்கப்பட்டு, பொருள் தேடப்போகும் முயற்சியைக் கைவிட்டு, விரைவில் உன்னிடம் ஓடிவந்துவிடப் போகிறார், பாரேன்!" என்று தோழி ஆறுதலுக்காகச் சொல்கிறாள்.

இப்படிப்பட்ட சொற்களைத் தோழியிடம் கேட்கும்போது, தலைவிக்கு உள்ளுக்குள் சிறிது மகிழ்ச்சி ஏற்படுகிறது என்றாலும், அதனை வெளிக்குக் காட்டிக்கொள்ளாமல் "அவராவது வரவாவது!" என்று தலைவி சலிப்புச் சொற்கள் கூறுகிறாள்.

"உன்னுடைய நல்ல அழகு கெட்டுப்போவதை அவர் பொறுத்துக்கொண்டிருக்கமாட்டார். உன்னுடைய அழகைக்கெடுக்கும் தன்மையுடையவரல்லர். அவர் கட்டாயம் வருவார், பார்!"

"அவர் ஒருக்காலும் வரமாட்டார்; வருபவராக இருந்தால், ஏன் போகிறார்?" என்கிறாள் தலைவி.

தலைவியை நம்ப வைப்பதற்கு என்ன செய்யலாம் என்று ஆராய்கிறாள் தோழி. அப்பொழுது, ஒரு மூலையில் பல்லியொன்று சத்தமிடுகிறது உடன் தோழி "அதோ பாரடி! பல்லிகூட சத்தம் போட்டு அவர் வரவைக் கூறுகிறது" என்றாள். அதேபோது தலைவியின் இடதுகண் துடிப்பதைக் காண்கிறாள். உடனே அதனைச் சுட்டிக்காட்டி, "உனது இடதுகண் துடிக்கிறது, பாரடி! இடதுகண் துடிப்பது நல்லதுக்காகடி!" என்று கூறியாவது நம்பவைத்து, அவள் வருத்தத்தைச் சிறிது போக்கலாம் என்று எண்ணுகிறாள் தோழி.

தலைவி இத்தகைய நம்பிக்கைச் சொற்களைக் கேட்டு, சிறிதளவு ஆறுதல் பெறுகிறாள்.

* * *

பாலைபாடிய பெருங்கடுங்கோ பாடிய பாலைக் கலியின் பத்தாவது செய்யுளில் அடங்கிய கருத்தின் விளக்கமே மேலே தீட்டிக்காட்டப் பட்டிருப்பதாகும். தலைவனுக்குப் பொருள் தேடவேண்டிய இன்றியமையாமை ஏற்படுவதும், அதன்பொருட்டு வெளியூர் செல்ல எண்ணுவதும், தலைவன் பிரிந்து சென்றுவிட்டதை நினைந்து தலைவி வருந்துவதும், தலைவியின் வருத்தத்தைப் போக்க தோழி ஆறுதல்மொழி கூறுவதும், ஆறுதல் மொழி கேட்டுத் தலைவி தேறுவதும் ஆன காதற்காட்சி எவ்வளவு அழகாகத் தீட்டப்பட்டிருக்கிறது என்பதை, இச்செய்யுளைச் சுவைப்போர் இனிதறிந்து இன்புறலாம். அருளுடையோர்க்கு அதாவது சான்றோர்க்கு அளிப்பது அறமாகும் என்பதும், அவ்வறம் செய்யும் தன்மையால் மனவலிவும், செல்வாக்கும், புகழும் ஏற்பட்டு, வெற்றியும் பொருளும் கிட்டும் என்பதும், அவ்வெற்றியும் பொருளும் கிட்டியவிடத்து இன்பம் விளையும்

என்பதும் தமிழகத்தின் சீரிய நாகரிகத்தை சுவை ஆசிரியர் நயம்பட விளக்கிக்காட்டுவதும் விளக்கிக் காட்டுவனவாகும். பாலைநிலக் காட் படித்துப்படித்து மகிழ்வதற்குரியதாகும்.

அரிதாய அறனெய்தி அருளியோர்க்(கு) அளித்தலும்
பெரிதாய பகைவென்று பேணாரைத் தெறுதலும்
புரிவமர் காதலின் புணர்ச்சியும் தருமெனப்
பிரிவெண்ணிப் பொருள்வயிற் சென்றநம் காதலர்
வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேளினி;

அடிதாங்கும் அளவின்றி அழலன்ன வெம்மையால்
கடியவே கனங்குழாஅய் காடென்றார் அக்காட்டுள்
துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறெனவும் உரைத்தனரே;

இன்பத்தின் இகந்தொரீஇ இலைதீந்த உலவையால்
துன்புறூஉம் தகையவே காடென்றார் அக்காட்டுள்
அன்புகொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை
மென்சிறக ராலாற்றும் புறவெனவும் உரைத்தனரே;

கன்மிசை வேய்வாடக் கனைகதிர் தெறுதலால்
துன்னரூஉந் தகையவே காடென்றார் அக்காட்டுள்
இன்னிழல் இன்மையால் வருந்திய மடப்பிணைக்குத்
தன்னிழலைக் கொடுத்தளிக்கும் கலையெனவும் உரைத்தனரே;

எனவாங்கு,

இனைநலம் உடைய கானஞ் சென்றோர்
புனைநலம் வாட்டுநர் அல்லர் மனைவயின்
பல்லியுப் பாங்கொத்(து) இசைத்தன
நல்லெழில் உண்கணும் ஆடுமால் இடனே.

—[பாலைக்கலி 10]

[அரிதாய - பெறுதற்கு அருமையான ; அறனெய்தி - அறஞ்செய்தலை மேற்கொண்டு ; பேணாரை - தமக்குக் கீழ்ப்படியாத பகைவர்களை ; தெறுதல் - அழித்தல் ; வலிப்பல் - துணிந்து கூறல் ; அழலன்ன - நெருப்பைப்போன்ற ; வயங்கிழாய் - விளங்குகின்ற நகைகளை உடையாய் ; கனங்குழாய் - பொன்னாற்செய்த கனமான குழையினையுடையாய் ; துடி அடி - உடுக்கைபோலும் அடியினையுடைய ; சயந்தலைப் - பெரிய தலையையுடைய கன்று, அதாவது யானைச்குட்டி ; பிடி-பெண்யானை ; களிறு - ஆண் யானை ; இகந்தொரீஇ- நீங்கிச் செல்லுதல் ; உலவை - காம்பு அதாவது மரக்கிளை ; பெடை—பெண்புறா ; கல் - மலை ; மிசை—மேல்; வேய் - மூங்கில் ; கனைகதிர் — திரண்ட கதிர்கள் ; தெறுதல் - சுடுதல் ; பிணை — பெண்மான், கலை — ஆண் மான் ; உண்கண் - மை தீட்டப்பட்ட கண்.]

தேனீயின் 'இசை'

தேனீக்கள் கூட்டமாக வரும்பொழுது, இனிய மெல்லோசை எழுவதைக் கேட்கிறோம். இதையே தேனீக்கள் பாடுகின்றன எனக் குறிப்பிடுகிறோம்.

தேனீயிடமிருந்து வரும் ஓசை, அதன் சிறகுகள் அசைக்கப்படுவதால் உண்டாகிறது. சிறகுகள் வெகு வேகமா மேலும் கீழுமாக அசைக்கப்படுவதால், காற்றில் தொடர்ந்து அலைகள் எழுப்பப்படுகின்றன. இந்தக் காற்று அலைகள் நம் காதில் படும்பொழுது, நாம் ஒரு சத்தத்தைக் கேட்கிறோம்.

பறவைகள் பறக்கும்பொழுது தமது சிறகுகளை மேலுங் கீழுமாக அசைக்கின்றன. இவ்வாறு அசைக்கப்படுவது எல்லாப் பறவைகளுக்கும் ஒரே அளவில் இருப்பதில்லை, அவற்றில் மாறுபாடு இருக்கிறது. காகம் அசைக்கிற அளவு பருந்தோ, கழுகோ அசைப்பதில்லை. வானத்தில் வட்டமிடும் பருந்தைப் பார்த்தால், சிறிது நேரத்திற்கு சிறகை அசைக்காமலே பறந்துகொண்டிருப்பதைப் பார்க்கலாம். சிறகு அதிகமாக அசைக்கப்படாததால், அந்தப் பறவை பறந்துசெல்லும்பொழுது சத்தம் உண்டாக்குவதில்லை. ஆனால் தேனீயின் சிறகுகள் மிக வேகமாக அசைக்கப்படுவதால், ஓசை உண்டாகிறது. ஒரு தேனீ ஒரு நிமிடத்துக்கு 26,000 தடவைகளுக்குமேல் தன் சிறகை மேலும் கீழும் அடித்துக்கொள்ளுகிறது. அதாவது ஒருநொடிக்கு (செகண்டுக்கு) 400 தடவைகளைக்குமேல் அதன் சிறகு அசைக்கப்படுகிறது. துடிப்பு மிக வேகமாக இருப்பதால், நமக்குத் தனிப்பட்ட சத்தங்கள் வராமல், தொடர்ச்சியான ஓசை நமக்குக் கேட்கிறது. இந்த ஓசைதான் தேனீயின் பாட்டு, தேனீயின் ரீங்காரம் என்று அழைக்கப்படுவதாகும்.

★●★

யாருக்குத் திருப்தி?

"கைகண்ட மருந்து, காணக் கிடைக்காத ஔடதம்" என்றெல்லாம் மருந்துக்கடையில் ஒரு புதிய மருந்து விளம்பரப்படுத்தப்பட்டது. "திருப்தி இல்லையானால், நாங்கள் பெற்ற பணத்தைத் திருப்பித் தந்துவிடுவோம்" என்று கடைக்காரர் எழுதியிருந்தார்.

பத்து ரூபாய் கொடுத்து, மருந்து புட்டி ஒன்றை வாங்கிக்கொண்டுபோன ஒருவர், பாதி மருந்து கரைந்தும் பலன் காணாததால் கடைக்கு வந்து, தான் கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்டார்.

"என்?" என்று கடைக்காரர், வினவினார்.

"இந்த மருந்தில் பலனில்லை. விளம்பரத்தில் 'திருப்தி இல்லையானால், பணத்தைத் திருப்பித் தந்துவிடுவோம்' என்று சொல்லியிருக்கிறபடி பணம் பத்து ரூபாயையும் உடனே தாருங்கள்" என்று மருந்து வாங்கியவர் கேட்டார்.

"நீங்கள் சரியாகப் படிக்கவில்லை. உங்கள் பணத்தில் எங்களுக்கு திருப்தியில்லையானால் நாங்கள் அந்தப் பணத்தைத் திருப்பித் தந்துவிடுவோம். அவ்வளவுதான். நீங்கள் தந்த பணத்தில நாங்கள் அதிருப்தி அடையவில்லை. எனவே, திருப்பித் தரவேண்டிய அவசியம் வரவில்லை" என்று கடைக்காரர் அமைதியுடன் சொன்னார்.



மனித நாகரிகத்தின் வயது

கதிரவனின் வயது சுமார் 60 ஆண்டுகள் என்று கணக்கிட்டுக்கொண்டால், மனித நாகரிகத்தின் வயது ஒரு நாள் ஆகும். அறிவியல் அறிஞர்களின் ஆராய்ச்சியின்படி பரிதி மண்டலம் தோன்றி ஏறத்தாழ 300 கோடி ஆண்டுகள் ஆகின்றன. பரிதி மண்டலம் தோன்ற எது காரணமாக இருந்தது என்பதை அறிவியல் இன்னமும் ஆராய்ந்துகொண்டிருக்கிறது. இது வரையில் விடை காணவில்லை; இனி காணக் கூடும். அறிவியல் அறிஞர்கள் ஞாயிறு மண்டலத்தின் காலவரையறையை அறுதியிட்டு கூறி இருக்கிறார்கள்.

ஞாயிற்றின் வயது :	300,00,00,000	ஆண்டுகள்
உலகத்தின் ,,	200,00,00,000	,,
முதல் பாறையின் ,,	175.00,00,000	,,
உயிரினத்தின் ,,	100,00,00,000	,,
மனிதனின் ,,	1,00,00,000	,,
நாகரிகத்தின் ,,	10,000	,,

இந்த வயதுகளை வைத்து மனிதனின் சராசரி வயதோடு ஒப்பிட்டுப் பார்த்தால், ஞாயிறு 60 வயதுள்ளவனாகவும், உலகம் 40 வயதுள்ளவனாகவும், உயிர்வாழ்க்கை 20 வயதுள்ளவனாகவும், மனிதன் இரண்டுமாதக் குழந்தையாகவும், நாகரிகம் ஒருநாள் குழந்தையாகவும் காணப்படும்.

★★★

பூச்சாண்டி !

ரயிலில் இருந்த கூட்டத்தில் குழந்தையொன்று வீரிட்டு அழ ஆரம்பித்துவிட்டது. தாய் எவ்வளவு பாடுபட்டும், பயமுறுத்தியும் குழந்தை அழுவதை நிறுத்தவில்லை. பின் வண்டியிலிருந்த ஒவ்வொருவரும் வேடிக்கை காட்டி பார்த்தார்கள். பயனில்லாமற் போயிற்று. கடைசியாக, கூட்டத்தில் கலக்காமல் மூலையில் உட்கார்ந்திருந்த ஒருவர், குழந்தையருகேவந்து, விரலை ஆட்டி வேடிக்கை காட்டினார். திடீரென்று அழுகையை நிறுத்திக்கொண்டு, குழந்தை தாயிடத்தில் போய் விட்டது. மற்றவர்களால் முடியாத காரியத்தைத் தான் செய்துவிட்டோம்என்ற பெருமையில், அவர் தன்னிடத்துக்குப் போனார்.

அப்பொழுது தாய், "பார்த்தியா? பூச்சாண்டி வருவான்னு சொன்னேன், நீ கேட்கலியே!" என்று குழந்தையை அருகே அழைத்துக்கொண்டாள்.

●●●

சண்டையைத் தடுக்க

"காலையில் நீ வேகமாக வயற்காட்டில் ஓடினாயே! எதற்காக? ரயிலுக்குப் போனாயா?" என்று கந்தனை பக்கத்து வீட்டுப் பக்கிரி கேட்டான்.

"ஒரு பெரிய சண்டையைத் தடுக்க ஓடினேன். நான் போயிராவிட்டால், அடிதடி பலமாயிருக்கும்" என்றான் கந்தன்.

"சண்டையா? இன்று காலையில் எதுவும் நடந்ததாகத் தெரியவில்லையே! யார் சண்டைபோட்டது?"

"முரட்டு முனியன்தான்!"

"முனியனா? மகாமுரடனாயிற்றே! அவன் யாருடன் சண்டைக்குப் போனான்?"

"என்னுடன்தான்."

"மன்றம்" வெளியீடுகள்

—★★★—

கண்ணீரும் செந்நீரும் வளர்த்த கழகம்

—இரா. நெடுஞ்செழியன் M. A. விலை ரூ. 0—12—0

ராஜாடி ராஜா!

இரா. செழியன் M. A. விலை ரூ. 0—12—0

பொது அறிவு

—இரா. செழியன் M. A. விலை ரூ. 0—8—0

மறைந்த திராவிடம்

—இரா. நெடுஞ்செழியன் M. A. விலை ரூ. 0—3—0

- ரூ. 10-க்குமேல் வாங்குவோர்க்கே விற்பனைக் கழிவு.
- விற்பனைக் கழிவு 25 சதவிகிதம்.
- முன்பணம் அனுப்புவோர்க்கே புத்தக அஞ்சலில் அனுப்பிவைக்கப்பெறும்.
- வி. பி. யில் வேண்டுவோர் வி. பி. கட்டணம் தனியே செலுத்தவேண்டும்.

விவரங்கட்கு :— நிர்வாகி, "மன்றம்"

26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1.

"மன்றம்" விற்பனையாளர்கள்

யாழ்ப்பாணம் :

திரு. கோ. இராமசாமி,
தமிழ்ப்பண்ணை,
யாழ்ப்பாணம்.

தென் இலங்கை :

திரு. எஸ். எம். மொன்னு முகமது,
நியூஸ் ஏஜண்ட் & புத்தக விற்பனையாளர்,
77, இரண்டாவது கிராஸ் தெரு,
கொழும்பு—11.

பம்பாய் :

திரு. R. V. சுப்பையா,
9, S. M. சால்,
தாராவி,
பம்பாய்—17.

பர்மா :

அன்பன் நூல் நிலையம்,
புத்தக விற்பனையாளர்,
118, மவுந்தாலே தெரு,
ரங்கூன்.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M. A.,
at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1.